

# MPEDA
## நியூஸ் லெட்டர்

தொகுப்பு 1/எண். 4/ஏப்ரல் 2018

பக்கம் 03

ரஷ்யாவில் இந்திய வர்த்தகப் பிரதிநிதிகளின் குழு

பக்கம் 23

இம்பாலில் 105வது இந்தியன் சயின்ஸ் காங்கிரஸ்

பக்கம் 39

கடல் உணவு எச்.எ.சி.சி.பி. பயிற்சி

ISSN 0245-7059

www.mpeda.gov.in

# உள்ளே...

தொகுப்பு 1 / எண் 4 / ஏப்ரல் 2018

**03**
ரஷ்யாவில் இந்திய வர்த்தகப் பிரதிநிதிகளின் குழு






**11**
ஃபுட் புராசசிங் கான்கிலேவ் - 2018 கொல்கத்தா

**13**
துறைமுகங்களில் மீன் வரத்தின் சிறப்பம்சங்கள்



**22**
ஒகி புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்காக பூத்துறையில் மினி கண்காட்சி



**23**
இம்பாலில் 105வது இந்தியன் சயின்ஸ் காங்கிரஸ்

**26**
எம்.எஸ்சி சான்றுக்காக தேர்வான பத்து இந்தியன் கடல் மீன் பிடிப்புகள்

**31**
பல்வகைப்படுத்துதல்: விழிப்புணர்ச்சி முகாம்

**33**
நெல்லூர் எம்.பி.இ.டி.எ. சேட்டலைட் சென்டரில் விவசாயிகள் கூட்டம்



**35**
கர்நாடக விவசாயிகள் ஆந்திரப்பிரதேசத்திற்கு கற்றறிதல் பயணம்

**38**
நிலையான நீர் உயிரின வளர்ப்பு மற்றும் பல்வகைப்படுத்தல் கருத்தரங்கு

**39**
கடல் உணவு எச்.எ.சி.சி.பி பயிற்சி

இதில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகள் அனைத்தும் அவற்றை எழுதிய படைப்பாளிகளின் கருத்தாகும். அவை எம்.பி.இ.டி.எ.வின் கருத்துக்களல்ல. எனவே, கட்டுரைகளின் நம்பகத்தன்மைக்கு எம்.பி.இ.டி.எ. அல்லது ஆசிரியர் குழு பொறுப்பேற்காது

MPEDA
தொகுப்பு 1/எண். 4/ ஏப்ரல் 2018
நியூஸ் லெட்டர்

**ஆசிரியர் குழு**

**திரு. T. டோலா சங்கர், IOFS**
இயக்குனர் (மார்க்கெட்டிங்)

**திரு. B. ஸ்ரீகுமார்**
செயலாளர்

**திருமதி. ஆஷா C. பரமேஸ்வரன்**
இணை இயக்குனர் (தரக்கட்டுப்பாடு)

**திரு. P. அனில்குமார்**
இணை இயக்குனர் (மீன்வளம்)

**திரு. K.V. பிரேம்தேவ்**
துணை இயக்குனர் (எம்.பி)

**முனைவர். T.R. ஜிபின்குமார்**
துணை இயக்குனர் (அபிவிருத்தி)

ஆசிரியர்
**முனைவர். M.K. ராம்மோகன்**
இணை இயக்குனர் (மார்க்கெட்டிங்)

உதவி ஆசிரியர்
**திருமதி. K.M. திவ்யா மோகனன்**
முதுநிலை எழுத்தர்

இதழாக்க உதவி
**பிவேல்டு கார்ப்பொரேட் சொல்யூஷன்ஸ் பி லிட்.**
166, ஜவஹர் நகர், கடவந்தரா,
கொச்சி, கேரளம், இந்தியா 682 020
தொலைபேசி : 0484 2206666, 2205544
www.bworld.in, life@bworld.in

வடிவமைப்பு
**ரோபி அம்பாடி**




www.mpeda.gov.in
support@mpeda.gov.in

**கடல்பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்திற்காக அச்சிட்டு வெளியிடுபவர்**

திரு. பி.ஸ்ரீகுமார், செயலாளர்,
கடல்பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம்
(வர்த்தகம் & தொழிற்துறை அமைச்சகம், இந்திய அரசு)
எம்.பி.இ.டி.எ. ஹவுஸ், பனம்பிள்ளி நகர்,
கொச்சி - 682 036, தொலைபேசி : 0484-2311979

**வெளியிடுவது**

எம்.பி.இ.டி.எ. ஹவுஸ், பனம்பிள்ளி அவென்யு,
கொச்சி - 682 036.

**அச்சகம்**

பிரிண்ட் எக்ஸ்பிரஸ்,
44/169 எ, அசோகா ரோடு,
கலூர், கொச்சி - 682 017.



**மரு. ஏ. ஜெயதிலக்**
சேர்மன்

அன்பு நண்பர்களே,

எம்.பி.இ.டி.எ. சீஃபுட் எக்ஸ்போ குளோபல், புருசெல்ஸ் 2018 என்ற கண்காட்சியில் இந்திய ஏற்றுமதியாளர்களின் பங்கேற்புடன் இந்திய கடல் உணவு வர்த்தகத்தின் மகத்துவத்தை வெற்றிகரமாக நிலைநாட்டி வந்துள்ளது. இந்திய பிரதிநிதிகள் DG SANTE அதிகாரிகளுடன் கலந்து பேசினர். இதில் நவம்பர் 2017ல் FVO MISSION மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் அது சமயத்தில் வலியுறுத்தப்பட்ட உற்பத்திப் பொருட்களில் ஆன்டிபயாடிக்சின் அளவு மற்றும் நீர் உயிரின வளர்ப்பின் மூலம் உற்பத்தி செய்யப்படும் இறால்களின் மாதிரிகளின் அளவைக் குறைத்தல், பதப்படுத்தும் நிலையங்களை ரி லிஸ்ட் செய்வது போன்ற விசயங்கள் குறித்து விவாதம் நடத்தினர்.

அதே நேரத்தில் ஐரோப்பிய யூனியனின் ஆடிட் குழு ஒன்று இந்தியாவிற்கு ஏற்றுமதி தொடர்பான நடவடிக்கைகள், தரச்சோதனை நடைமுறைகள், போன்றவற்றை ஆய்வு செய்ய வந்தது. இந்த குழுவின் ஆரம்பநிலை அறிக்கைகளின்படி அவர்களது திருப்தியான நிலை வெளிப்பட்டாலும் நாம் அவர்கள் வெளியிடும் இறுதி அறிக்கையின் பாராட்டுதல்களுக்கும் குறைபாடு குறித்துள்ள விமர்சனங்களுக்காக காத்துள்ளோம்.


இறக்குமதி ஆர்டர்களை குறைப்பதற்கான செய்திகள் பலதரப்பட்ட மார்கெட்களிலிலிருந்தும் வந்த வண்ணம் உள்ளது. இதனால் உற்பத்தி நிலையங்கள் வரை பின்னடைவு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. எனது கருத்துப்படி இந்த நிலை தற்காலிகமானதாகும். விரைவில் இந்த நிலைமை மாறி சுமுகமான நிலை ஏற்படும். இதனால் விவசாயிகள், பதப்படுத்துவோர், மற்றும் இறக்குமதியாளர்களும் கூட பயனடைவர் என்பது உறுதி. இந்த சூழல் மூலமாக நாம் நல்ல திட்டமிடுதல் மூலமாக மாற்றுவழி ஒன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்தியாவின் மீன்வளத்தில் வர்த்தக முக்கியத்துவமிக்க வகைகள் எத்தனையோ உள்ளன. இந்த தருணத்தில் ஆராய்ச்சி நிறுவனங்கள் ஃபின்ஃபிஷ் மற்றும் செல்ஃபிஷ் வகைகளில் வர்த்தக முக்கியத்துவம் கொண்ட ரகங்களை உற்பத்தி செய்யும் வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும் .

உணவு மற்றும் வர்த்தகப் பயன்பாட்டிற்காக கடல்பாசிகளை அறுவடை செய்யும் தொழில் நுட்பங்களில் முயற்சித்து அவற்றைப் பிரபலப்படுத்த வேண்டும். தற்சமயம் 42 நாடுகளில் கடல் பாசி வர்த்தக ரீதியில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் முன்னிலை வகிப்பது சீனாவாகும். இங்கு உணவிற்காக கடல்பாசிகள் சேகரிக்கப்படுகிறது. இது தவிரவுள்ள நாடுகள் கொரியா, ஜப்பான், இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், யு.எஸ்.எ. சிலி, நார்வே போன்றவையாகும். உலக அலவிலான கடல் பாசிகள் உற்பத்தியில் முதல் 10 நாடுகள் 96 சதவீதம் உற்பத்தி செய்கின்றன. இதுவரை 60 வகையான கடல்பாசிகள் வர்த்தக ரீதியில் முக்கியமானவை என்று இனம் காணப்பட்டுள்ளது. இந்தியாவில் இவற்றின் வகை குறைவாக இருந்தாலும் அவை சேகரிக்கப்பட வேண்டும் அல்லது உற்பத்தியாக வேண்டும். இதனை வளர்ப்பதானால் அது Kappaphycus ரகத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். நமது நாட்டில் கடல்பாசிகள் உற்பத்திக்கான வாய்ப்புகள் அதிக அளவில் உள்ளது. இதற்கான தொழில்நுட்பங்கள் ஏற்கனவே சி.எம்.எஃப்.ஆர்.ஐ, மற்றும் சி.எஸ்.எம்.சி.ஆர்.ஐ. போன்ற நிறுவனங்களிடம் உள்ளது. இவற்றில் முக்கியமான அம்சம் என்பது மாநிலங்கள் இதற்குத் தேவையான நிலம் மற்றும் நீர் வசதியுடன் முன்வந்து பலதரப்பட்ட மீனினங்களை வளர்க்க முயற்சிக்க வேண்டும்.

மேலும் இந்த தருணத்தில் சமீபத்தில் நம்மைவிட்டுப் பிரிந்த முனைவர்.இ.ஜி.சைலாஸ் அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறேன். இவரது இந்திய மீன் வளத்துறைக்காக அறிவியல் நீதி யாகவும் எம்.பி.இ.டி.எ. மற்றும் ஆர்.ஜி.சி.எ. போன்ற அமைப்புகளின் பொறுப்புள்ள பதவிகளில் இருந்து கொண்டு மகத்தான சேவை செய்தவர் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நன்றி!

# ரஷ்யாவில் இந்திய வர்த்தகப் பிரதிநிதிகளின் குழு



மரு.எ.ஜெயத்திலக் இ.ஆ.ப. தலைமையிலான இந்தியப் பிரதிநிதிகள் ரஷ்யன் பெடரேசனின் சேம்பர் ஆஃப் காமர்சைப் பார்வையிடச் சென்ற போது எடுத்த படம்

எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் மரு.எ.ஜெயத்திலக், இ.ஆ.ப. அவர்களின் தலைமையில் இந்தியப் பிரதிநிதிகளின் குழு ஒன்று ரஷ்யா சென்று கடல் உணவுப் பொருட்களின் ஏற்றுமதி தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் முயற்சியில் ஈடுபட்டது. அச் சமயத்தில் சேம்பர் ஆஃப் காமர்ஸ் & இண்டஸ்டிரிஸ், மீன்வள இயக்கங்கள் மற்றும் இது தொடர்பான அரசு அலுவலகங்களுடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டது.

மார்ச், 20 முதல் 23 வரையான இந்த பயணக்குழுவிற்கு மரு.அ.ஜெயத்திலக் தலைமை வகித்தார். இதில் பிரதிநிதிகளாக திரு.அர்சிமான் லகிரி, துணை இயக்குநர், எம்.பி.இ.டி.எ., திரு.ஜெயபாலன், துணை இயக்குநர், இ.ஐ.எ., திரு.எம். பகவத், காட்ரே மெரைன் எக்ஸ்போர்ட்ஸ், பி.லிட். ரத்தனகிரி, திரு.என்.எல்.வானிக், ஆா கங்கா எக்ஸ்போர்ட்ஸ், வெராவல், திரு.என்.வி.ஃபோஃபாண்டி, தீப்மாலா மெரைன் எக்ஸ்போர்ட்ஸ், வெராவல், திரு.என்.எல்.பென்ஸ்லா, செயில் கங்கா இயு எக்ஸ்போர்ட்ஸ், வெராவல், திரு.எச்.ஆர்.சோலங்கி, கிருஷ்ணா ஃபுரோசன் ஃபுட்ஸ், டி.ஐ.யு.(யு.டி) திரு.ஆர்.கே.சமாடியா, கே.ஆர். சீஃபுட்ஸ் பி.லிட்.வெராவல், திரு.எ.படில், சோனியா ஃபிஷ்சரிஸ், மும்பை, திரு.டி.ா,கேஸ்டில்ராக் ஃபிஷ்சரிஸ் பி.லிட். மும்பை, திரு.ஜே.ரோகாகாலே, உல்கா சீஃபுட்ஸ் பி.லிட்.ராஜ்காட், திரு.டி.பி.ஜெகதீஷ், ஜெகதீஷ் மெரைன் எக்ஸ்போர்ட்ஸ்,பீமாவரம், மற்றும் திரு.வி.புதுசெரில், பெல் ஃபுட்ஸ், கொச்சி ஆகியோர் பங்கேற்றனர்.

### சேம்பர் ஆஃப் காமர்ஸ் மற்றும் ரஷ்யன் பெடரேசன் சந்திப்பு

இந்த பிரதிநிதிகளின் குழு ரஷ்யா பெடரேசனின் சேம்பர் ஆஃப் காமர்சின் இண்டர் நேனல் கோஆப்ரேசன் டிபார்ட் மெண்டின் இயக்குனர் திரு.அலெக்சாண்டர் வி.கோப்கோவ் மற்றும் திருமதி.எலீனா கயசோவா, சீனியர் எக்ஸ்பெர்ட் ஆகியோரை மார்ச் 20ஆம் தேதி பிற்பகலில் சந்தித்தனர்.

திரு அலெக்சாண்டர் பேசும்போது சாங்காய் கோஆப்ரேசனின் பாகமாக திடமான மூலதனம் மற்றும் இணைந்து செயலாற்றுவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தி னார். மேலும் அவர் குறிப்பிடும் போது இந்தியாவுடனான இருதரப்பு நடவடிக்கைகள் சுமுகமாக இருந்தாலும் வர்த்தக ரீதியான தொடர்பு போதுமானதாக இல்லை என்று குறிப்பிட்டார். வேளாண்துறை மற்றும் கடல் உணவுப் .பொருட்களுக்கான வர்த்தக வாய்ப்புகள் ரஷ்யாவில் பெருகிவருகிறது என்று கூறினார். ரஷ்யாவில் 182 பதிவு செய்யப்பட்ட சேம்பர் ஆஃப் காமர்ஸ் சுமார் 53,000 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது என்பதையும் குறிப்பிட்டார்.



*மரு.எ.ஜெயத்திலக் இ.ஆ.ப. தலைமையிலான இந்தியப் பிரதிநிதிகள் ரஷ்யன் பெடரேசனின் சேம்பர் ஆஃப் காமர்சின் அதிகாரிகளுடன் கலந்தாலோசனை செய்யும் காட்சி*

பிரதிநிதிக் குழுவின் தலைவர் எம்.பி.இ.டி.எ.வின் நடவடிக்கைகளை விளக்கிக் கூறும்போது இந்தியாவின் கடல் உணவு மட்டுமே ஏற்றுமதி வர்த்தகத்தில் ரஷ்யாவின் பங்கு ஒரு சதவீதம் என்று கூறினார். அடுத்ததாக எஃப்.எஸ்.வி.பி.எஸ். 86 ஏற்றுமதி யாளர்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளதைக் கூறினார். மேலும் இந்தியாவில் நடைபெறவிருக்கும் சர்வதேச கடலுணவுக் கண்காட்சியில் கலந்து கொள்ள உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்தார். BRICS நாடுகளுக்கிடையே நடைபெற்ற பிசினஸ் கவுன்சில் கூட்டத்தின் போது அரசாங்கங்களுக்கு இடையே பேச்சு வார்த்தை நடத்துவது, இந்தியா மற்றும் ரஷ்யாவும் சேர்ந்து உணவுப் பாதுகாப்பு சான்றிதழ் தொடர்பாக விவாதிப்பது, கடலுணவு தொடர்பான பிரச்சினைகளை ரஷ்யா இந்தியா பிசினஸ் கவுன்சிலுக்கு கொண்டு செல்வது, மற்றும் விருப்பமுள்ள கடலுணவு சார்ந்த உறுப்பினர்களின் பட்டியலை சிசிஐ, ஆர்எஃப் மற்றும் எம்.பி.இ.டி.எ.வுடன் பகிர்ந்து கொள்வது போன்ற முக்கியமான விசயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்தப் பயணத்தின் முதல் நாளின் பிற்பகலில் பிரதிநிதிகள் All - Russian Association of Fisheries Enterprises, Enterpreneurs and Exporters என்ற அமைப்பின் தலைவரான திரு.ஜெர்மன் வெரேவுடன் கலந்துரையாடினர். எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் இந்தியாவின் கடலுணவுத் துறையின் செயல்பாடுகளை விவரித்தார். மேலும் அந்த நிறுவனத்தின் தலைவரை இந்தியாவில் நடைபெறவிருக்கும் சர்வதேச கடலுணவுக் கண்காட்சியில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார். இந்த கூட்டத்தின்போது இந்திய ஏற்றுமதியாளர்கள் அங்குள்ள தங்களது வாடிக்கையாளர்களுடன் சுமுகமான வர்த்தகத்திற்கான வழிமுறைகள் குறித்து ஆலோசனை நடத்தினர். மேலும் ARAFEEEயின் தலைவர் இந்தியாவிற்கு நீலநிற நீந்தும் கடல் நண்டு மற்றும் சிலரக மீன்களை ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற தனது விருப்பத்தைக் கூறினார். மேலும் இந்தியாவிலுள்ள ரஷ்யாவிற்குத் தேவைப்படும் முக்கியமான கடல் உணவுப் பொருட்கள் குறித்த விவரங்களை சேகரித்துக் கொண்டார்.

### மாஸ்கோ சேம்பர் ஆஃப் காமர்ஸ்

அன்று மாலை பிரதிநிதிகள் திரு.சுரேன் ஓ வர்த்தயான், துணைத் தலைவர் மற்றும் திரு.மணிஷ்குமார், துணைத் தலைவர், மாஸ்கோ சேம்பர் ஆஃப் காமர்ஸ் & இண்டஸ்ட்ரி ஆகியோரைச் சந்தித்துப் பேசினர். திரு.சுரேன் மாஸ்கோவிலுள்ள சேம்பர் ஆஃப் காமர்ஸின் நடவடிக்கைகளை எடுத்துக் கூறினார். இங்கு சுமார் 16,000 உணவு சார்ந்த நிறுவங்கள் செயல்பட்டு வருவதாகக் கூறினார். இந்தப் பகுதியில் நான்கு விமான நிலையங்களும், 40 சதவீத வர்த்தகம், ரஷ்யபெடரேசனின் ஜி.டி.பி.க்கு 25 சதவீத பங்களிப்பு, மற்றும் 33 சதவீத விஞ்ஞான ஆராய்ச்சி போன்றவை இந்த பகுதியில் நடைபெற்று வருவதாகக் கூறினார். மேலும் இங்கு ஃபுட் சிட்டி எனப்படும் மிகப்பெரிய ஃபுட் மார்க்கெட் செயல்பட்டு வருவதையும் எடுத்துக் கூறினார்.

திரு.சுரேன் குறிப்பிட்ட ஒரு விசயம் இரு நாடுகளுக்கிடையே நல்லுணர்வு இருந்தாலும் வர்த்தக ரீதியில் அது அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்பதைக் குறிப்பிட்டார். மேலும் ரஷ்யாவில் கடல் உணவு மேம்பாட்டிற்காக அரசாங்கம் எடுத்துவரும் திட்டங்களையும் விளக்கினார். இண்டலிஜிண்ட் சர்ட்டிபிகேசன் மற்றும் வாங்குவோர் பட்டியல் ஆகியவற்றை வழங்குவதற்கான சேவைகளைச் செய்ய விரும்புவதாகவும் கூறினார்.

எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் சேம்பர் ஆஃப் காமர்ஸ்,




*மாஸ்கோவில் மரு.எ.ஜெயத்திலக் இ.ஆ.ப. தலைமையிலான இந்தியப் பயணக் குழுவினர் சி.சி.ஐ. கூட்டத்தில் பங்கேற்ற காட்சி*

மாஸ்கோ இது போன்ற ஒரு சந்திப்பிற்கு ஏற்பாடு செய்ததற்கு இந்தியாவின் சார்பில் நன்றியைக் கூறினார். மேலும் இந்தியா கடல் உணவு வர்த்தகத்தை விரிவாக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாகக் கூறினார். மார்ச் 22ல் நடைபெறவிருக்கும் வாங்குவோர் - விற்போர் சந்திப்பில் கலந்து கொள்ள மாஸ்கோ சேம்பர் ஆஃப் காமர்ஸ் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்தார். சுமுகமான வர்த்தகம் நடைபெறுவதற்காக சேம்பர் ஆஃப் காமர்ஸ், மாஸ்கோ எடுத்துவரும் நடவடிக்கைகளை வரவேற்றார்.

**ஃபுட் சிட்டி, மாஸ்கோ**

பயணத்தின் இரண்டாம் நாள் மாஸ்கோவிலுள்ள ஃபுட் சிட்டியைப் பார்வையிட பிரதிநிதிகள் தலைவரின் தலைமையில் தயாராயினர். இது மாஸ்கோவின் புறநகர்ப் பகுதியில் அமைக் கப்பட்டுள்ளது. இதன் அடிப்படை நோக்கம் என்பது மொத்த விற்பனையாளர்களுக்கும்,வாடிக்கையாளர்களுக்கும் இடையே தலைதூக்கும் இடைத் தரகர்களைத் தவிர்ப்பதாகும். மேலும் சிறிய அளவிலான உணவுப் பொருட்களை நகர்ப்பகுதியை விட நகரத்தை விட்டு அகல இருக்கும் பகுதிகளுக்கு விநியோகம் செய்வதாகும். இதன் மேலாளரான பெண்மணி இந்தியப் பிரதி நிதிகளுக்குத் தேவையான விளக்கங்களைக் கொடுத்ததுடன், குறிப்பாக மீன்கள் விற்பனைப் பிரிவிற்கு அழைத்துச் சென்றார். இது அமைந்துள்ள நிலப்பரப்பு சுமார் 124 ஏக்கராகும். இதில் கடைகள் 3,46,527 சதுரமீட்டர் பரப்பிலும், அலுவலக இடம் 30,880 ச.மீ. பரப்பிலும், நவீனமான சேமிப்புக் கிடங்கு 3,00,000 ச.மீ. மற்றும் 20,000 சரக்குகளை ஏற்றி இறக்குவதற்கான இடங்களும், 6000 வாகனங்களை நிறுத்துவதற்கான இடங்களும், அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள உணவு விடுதியில் சுமார் 656 அறைகள் உள்ளன.



*ஃபுட் சிட்டி மாஸ்கோவில் கடல் உணவுப் பொருட்கள்*

இங்கு பலவிதமான பொருட்களை 18 பிரிவுகளில் வகைப்படுத்தி வைத்துள்ளனர். அவை, இறைச்சி, பால், பாதி யளவிற்கு மட்டும் பதப்படுத்திய பொருட்கள், பலசரக்கு, பழங்கள் மற்றும்காய்கறிகள், புகையிலைப்பொருட்கள், குழந்தைகளுக்கான உணவுகள், அனைத்துப் பொருட்களும் உள்ள இடம், ரொட்டி, பிஸ்கட், மீன், ஆயத்த இறைச்சி மற்றும் மீன் தயாரிப்புகள், பேக்கரி பொருட்கள், மது மற்றும் மதுவற்ற குடிபானங்கள், வீட்டு வளர்ப்புப் பிராணிகளுக்கான பொருட்கள், வீட்டுத்தேவைகான இராசயனங்கள் மற்றும் மலர்கள் என்று அவற்றை வரிசைப்படுத்தலாம்.




ஃபுட் சிட்டி மாஸ்கோவில் இந்தியப் பிரதிநிதிகள்

ஃபுட் சிட்டியின் மீன் பிரிவு இரண்டு ரகத்தில் அமைக் கப்பட்டுள்ளது. ஒன்று பிரதான அறையின் உட்பகுதியிலும், இரண்டாவது வெளியிப்பகுதியில் பல்வேறு விதமான ஸ்டால் களில் அமைக்கப்பட்டதாகும். உட்பகுதியில் அமைக்கப்பட்ட இடத்தில் இறந்த நிலையிலுள்ள மீன்களுடன் மிகக் குறைந்த அளவில் உயிருடனுள்ள மீன்களும் இருக்கும். வெளிப்பகுதி யில், உயிருடனுள்ள மீன்கள் அதிகமாகவும், குளிரூட்டப்பட்டவை குறைவாகவும் இருக்கும். பதப்படுத்தப்பட்ட மீன்களாக உறைநிலை, உலர்ந்தது, குளிரூட்டப்பட்டது, உயிருடன் உள்ளவை, நெருப்பில் வைக்கப்பட்டவை, உப்பில்வைக்கப்பட்டவை மற்றும் உப்பு நீரில் ஊறவைககப்பட்டவை போன்றவை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 145 மீன் விற்பனைப் பிரிவுகளை பிரதிநிதிகள் பார்க்க நேர்ந்தது. இதில் முன்னிலை வகிப்பவர்கள் ரஷ்யன் பிஷ் கம்பெனி, காலின் கேவியர் ஹவுஸ், அக்கூ – ஹெரிடேஜ் ஆஃப் ஆன்செஸ்டர், OOO PTICETROM டிஸ்புரோம்+ எம்.ஆர்.பி.சோலோமோஸ், ஜோர்கா & மில்கா மற்றும் எல்.எல்.சி. விக்டோரியா ஆகியோராவர்.

இங்கு விற்கப்படும் உறைநிலைப் பொருட்களுடன் தரம் மற்றும் ஆரோக்கிய சான்றிதழும் வழங்கப்படுகிறது என்பதை பிரதிநிதிகள் கண்டறிந்தனர். இந்தியாவிலிருந்து தயாரிக்கப்பட்ட உல்கா சீஃபுட், கேஸ்டில்ராக் சீஃபுட்ஸ் மற்றும் அபாத் சீஃபுட் ஆகிய நிறுவனங்களின் மீன் உறைநிலைப் பொருட்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

புதிய மற்றும் குளிர்ந்த மீன்களின் வரிசையில் 50 சதவீதம் நண்டுகளும் திலோப்பியா ரக மீன்களும் இருந்தன. உறைநிலையிலுள்ள பிளாக் டைகர் மீனிற்கு மிகுந்த வரவேற்பு இருந்தது. இது பங்களாதேசத்திலிருந்து தருவிக்கப்பட்டதாகும்.

ரஷ்ய நீலநிற நீச்சலடிக்கும் ஜயண்ட் நண்டு உயிருடன் விற்பனைக்கு இருந்தது. இதற்கும் மக்களிடையே மிகுந்த வரவேற்பு இருந்தது. அதேபோல் டிரவுட் மீனும் கணிசமான அளவில் புதிய நிலையில் இருந்தது. இவை இரண்டுமே முழுவடிவிலும், துண்டங்களாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

இறால் பிரிவில் வடக்கு மற்றும் வெப்பமண்டல ரகம் எனும் இரண்டு வகை இருந்தன. இறால்கள் புதிய உறைநிலை வடிவிலும், கொதிக்க வைத்து உறைய வைத்த நிலையிலும் விற்கப்படுகிறது. இந்த இறால்கள் சிறிய கன்ஸ்யூமர் பேக்களிலும்,உதிரியாகவும் வைக்கப்பட்டுள்ளது.நமக்குத் தேவையான அளவுகளில் வாங்கிக் கொள்ளலாம்.

இந்த பிரதிநிதிக் குழுவிலுள்ள இந்திய ஏற்றுமதியாளர்கள் அங்குள்ள மொத்த விற்பனையாளர்களிடம் வர்த்தகம் தொடர்பான பேச்சு வார்த்தைகள் நடத்தினர். முக்கியமான தொடர்பு விவரங்கள் சேகரிக்கப்பட்டு வர்த்தகம் தொடர்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

இங்கு ஒவ்வொரு நாடும் பங்கேற்கும் விதத்திலான காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் குறிப்பான வியட்நாம், மாசிடோனியா, இஸ்ரேல், மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளின் காட்சிக் கூடங்களுக்குச் சென்ற பிரதிநிதிகள் தங்களுக்குத் தேவையான முக்கியமான தகவல்களைச் சேகரித்துக் கொண்டனர். மேலும் இந்திய ஏற்றுமதியாளர்கள் இந்திய



*இன்டர்நேசனல் அஃபையர்சின் தலைவரின் உதவியாளரை எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் கௌரவிக்கும் காட்சி*

கடல் உணவுப் பொருட்களையும் இதுபோன்று கண்காட்சியில் வைத்து வர்த்தக மேம்பாட்டிற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று எம்.பி.இ.டி.எ.வின் தலைவரைக் கேட்டுக் கொண்டனர்.

அங்குள்ள கடைகளில் வைக்கப் பட்டிருந்த தெர்மோ பேக்ஸ் எனும் பொருள் பார்வையாளர்களைக் கவர்ந்தது. கடைகளில் வாங்கிய கடல் உணவுப் பொருட்களை குறைந்தது ஆறு மணி நேரத்திற்கு கெட்டுவிடாமல் பாதுகாக்கும் விதத்தில் உருவாக்கப்பட்ட தெர்மோ பேக்ஸ் குறித்த தகவல்களை பிரதிநிதிகள் சேகரித்தனர்.

எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் ஃபுட் சிட்டியின் அலுவலகர்கள் இதுபோன்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து ஃபுட் சிட்டியின் செயலாக்கத்தை விவரித்துக் கூறியமைக்கு நன்றி கூறினார். மேலும் இந்தியாவும் இதில் பங்கேற்கும் விதத்திலான முயற்சிகளின் போது தான் தொடர்பு கொள்ள விரும்பும் தனது விருப்பத்தையும் தெரிவித்தார்.

### பெடரல் கஸ்டம்ஸ் சர்வீஸ் சந்திப்பு

இந்த பயணக்குழு பெடரல் கஸ்டம்ஸ் சர்வீசின் கஸ்டம்ஸ் கோஆப்பரேசன் டிபார்ட்மென்டின் தலைவரான திரு.செர்கே எ கொனோவெலென்கோ மற்றும் இதன் துணைத் தலைவர் திரு.எ.ஐ.ரியாஜெனோவ் ஆகியோரைச் சந்தித்து வர்த்தகம் தொடர்பாக உரையாடினர்.

கஸ்டம்சின் தலைவர் இந்தியப் பிரதிநிதிகளை வரவேற்றார். அவர் பேசும் போது ரஷ்யா இந்தியாவுடனான சுமுகமான நல்லுறவை எப்போதும் விரும்பி வரவேற்கிறது என்றும் குறிப்பாக கஸ்டம்ஸ் துறையுடன் மிகவும் விரும்பத்தக்க விதத்தில் இருந்து வருகின்றோம் என்று கூறினார்.

எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் ரஷ்யாவுடனான வர்த்தக நல் லுறவிற்காக, மிகவும் குறுகிய கால அவகாசத்தில் இதுபோன்ற ஒரு சந்திப்பை ஏற்படுத்தித் தந்தமைக்காக நன்றி கூறினார். மேலும் ரஷ்யாவுடனான வர்த்தகத்தில் இந்தியா எதிர்கொள்ளும் பிரச்சனைகளை எடுத்துக் கூறினார். மேலும் அவர் பேசும் போது, ரஷ்யாவுடனான வர்த்தக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான அம்சங்களான டிரேட் மேனுவல், கடல் உணவுப் பொருட்களுக்கான சாம்பிள் மற்றும் ஆய்வுக்கான வழிமுறைகள், கிரீன் சேனல் தேவைகள், மற்றும் சரக்குகளைத் திருப்பி அனுப்புவதற்கான செயல்முறைகள் போன்ற குறிப்புகளை ஆங்கில மொழியில் வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ரஷ்யாவின் கஸ்டம்ஸ் தலைவர் பேசும் போது ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் அனைத்திற்கும் அவற்றின் தரம் மற்றும் உற்பத்தி, சாம்பிலிங் போன்றவற்றின் ஆவணங்கள் மிகவும் அவசியம் என்று கூறினார்.

இந்திய ஏற்றுமதியாளர்கள் ரஷ்யாவிற்கு பொருட்களை அனுப்பும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் பற்றிய



*ஃபுட் சிட்டி மாஸ்கோவில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள கடலுணவுப் பொருட்களைப் பற்றிய விவரங்கள் இந்தியப் பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறப்படுகிறது*

விளக்கங்களை வலைதளங்களான EURASIA மற்றும் எகனாமிக் கமினின் வலைதளத்தில் காணவேண்டும் என்றும் கூறினார்.

டிரான்ஸ்போர்ட் கம்பெனிகள் பெடரல் கஸ்டம்சின் விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டார். மேலும் அவர் கிரீன் கோரிடார் திட்டம் அபிவிருத்திக்காக ஆய்வில் இருப்பதாகக் கூறினார். எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் இது போன்ற எதிர்காலத்தில் உறுதியான வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கித் தரும் விதத்திலான சந்திப்பை ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு நன்றி கூறினார்.

### ரஷ்யன் பெடரேசனினுள்ள இந்தியத் தூதுவருடன் சந்திப்பு

எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் ரஷ்யன் பெடரேசனிலுள்ள இந்தியத் தூதுவர் திரு.பங்கஜ் சரன் அவர்களை மாஸ்கோவிலுள்ள இந்தியன் தூதுவரகத்தில் சந்தித்தார். இந்த சந்திப்பில் அந்த அலுவலகத்தின் இரண்டாவது செயலர் (வர்த்தகம்) திரு.ஜார்ஜ் தாமஸ் அவர்களும் உடனிருந்தார். மரு.ஜெயத்திலக், தூதுவரிடம் இந்திய ஏற்றுமதியாளர்களின் வர்த்தகம் தொடர்பான பிரச்சனைகளை எடுத்துக் கூறினார். அனுப்பிய சரக்குகளை சோதனை செய்வது, ஒதுக்கி வைப்பது, மற்றும் தரம் தொடர்பான பிரச்சனைகளை எடுத்துக் கூறினார். மேலும் இந்த பயணக்குழு கஸ்டம்ஸ் அதிகாரிகளுடன் நடத்திய கூட்டம் பற்றியும் அங்கு விவாதித்த அம்சங்களையும் எடுத்துக் கூரினார். மேலும் ஃபுட்சிட்டியைப் பார்வையிட்டதையும், அங்கு இந்தியாவின் சார்பில் ஒரு விற்பனை மையம் துவங்க முயற்சிகள் மேற்கொள்வதையும் கூறினார். தூதுவர் இந்திய ஏற்றுமதியாளர்கள் அனுபவிக்கும் இடர்பாடுகள் குறித்து வருத்தம் தெரிவித்தார். இவற்றைத் தீர்ப்பதற்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் உறுதியளித்தார். ரஷ்யா நடத்தவிருக்கும் இரண்டு நிகழ்ச்சிகளான தி வோர்ல்டு ஃபுட், மாஸ்கோ மற்றும் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் எகனாமிக் ஃபார்ம் ஆகியவற்றில் இந்தியா பங்கேற்க வேண்டும் என்று அலோசனை கூறினார்.




*மரு.எ.ஜெயத்திலக், இ.ஆ.ப. தலைவர், எம்.பி.இ.டி.எ. அவர்களுக்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள கடலுணவுப் பொருட்களைப் பற்றிய விளக்கம் எடுத்துக் கூறப்படுகிறது*

### பெடரல் கால்நடை மற்றும் பயிர்ச்சுகாதார சேவை சந்திப்பு

இந்திய வர்த்தகப் பிரதிநிதிகள் பெடரல் வெர்ட்டினரி மற்றும் பைட்டோசேனிடரி சர்விலன்ஸ் சர்வீசின் தலைமையின் உதவியாளர் திரு.வாசிலி லாவ்ரோஸ்கி என்பவரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

மரு.ஜெயத்திலக் அவர்களுக்கு தமது நன்றியைக் கூறினார். குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சந்திப்பின் போது எம்.பி.இ.டி.வின் செயல்பாடுகளை விளக்கினார். மேலும்



*வாங்குவோர் - விற்போர் சந்திப்பு நடைபெறுகிறது*

அவர்களை இந்தியாவிற்கு வருகைபுரிந்து இந்தியாவில் ரஷ்யன் பெடரேசனுக்கு ஏற்றுமதி செய்யப்படும் கடல் உணவுப் பொருட்கள் உயர்தரத்துடன் தயார் செய்யப்படும் முறைகளை ஆய்வு செய்யக் கேட்டுக் கொண்டார்.

லாவ்ரோஸ்கி ரஷ்யன் பெடரேசனில் இந்திய கடல் உணவுப் பொருட்களுக்கு இருக்கும் வாய்ப்புகளை எடுத்துக் கூறினார். மேலும் இந்தியா – ரஷ்யாவுடனான வர்த்தக மேம்பாட்டிற்காக ஒரு குழு இந்தியாவிற்கு வரவிரும்புவதாகக் கூறினார். ரஷ்யாவிற்கு ஏற்றுமதியாகும் பொருட்களின் தரம் குறித்து ஆய்வு செய்யும் அதிகாரி அவரது துறை செயல்படும் விதத்தை விளக்கினார். ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களில் விதி மீறல்கள் இருக்கும் பட்சத்தில் இந்த துறை தனது கடமைகளைச் செய்யத் தொடங்கும். தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு ஏற்றுமதியான பொருட்களைப் பற்றிய தரப் பரிசோதனைகள் நடத்தப்படும். தரப்பரிசோதனைகளில் கண்டறியப்படும் குறைபாடுகளை நீக்கிட சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு தகவல் அனுப்பப்படும். இதனைத் தொடர்ந்து அந்த நாடுகள் ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்ய விரும்பினால், இது போன்ற பிரச்சனைகள் ஏற்படாது என்பதை உறுதி செய்யும் விதத்தில் எழுத்துபூர்வமாக உத்திரவாதம் அளிக்க வேண்டும். மேலும் தரப்பரிசோதனை செய்த ஆவணங்கள் அனைத்தையும் அளிக்க வேண்டும். இந்த நடவடிக்கைகள் என்பது குறிப்பிட்ட ஏற்றுமதியாளர்களுக்கு மட்டுமேயன்றி சம்பந்தப்பட்ட நாட்டுடன் கிடையாது என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

மரு.ஜெயத்திலக் நன்றி கூறியதுடன், தரப்பரிசோதனை விதிமுறைகள் என்பது ரஷ்யன் பெடரேசன் மற்றும் இந்தியாவிற்குப் பொதுவானதாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதுபோல இந்தியாவிலுள்ள ஏற்றுமதியாளர்களை ரஷ்யன் பெடரலுக்குள் அனுமதித்து தரக் கோட்பாடு தொடர்பான விதிமுறைகளைத் தெரிந்து கொண்டு செயலாற்ற ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், ரஷ்யாவைச் சேர்ந்த குழுவும் இந்தியாவிற்கு வந்து கடல் உணவு ஏற்றுமதியில் இந்தியா கையாளும் தரக்கட்டுப்பாட்டு முறைகளை நேரடியாக கண்டு செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

திரு.ஜார்ஜ் தாமஸ், இரண்டாம் செயலர் (வர்த்தகம்) இந்தியாவில் ரஷ்யன் பெடரேசனின் அங்கீகாரம் பெற்ற உணவுப் பொருட்களின் தரப்பரிசோதனை நிலையங்கள் இருப்பதை எடுத்துக் கூறி, அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

மேலும் இந்தியத் தூதரகத்தின் அதிகாரிகள் இங்கு வந்து செல்லலாம் என்றும் இந்தியாவுடன் சுமுகமான வர்த்தகத் தொடர்பை எப்போதும் விரும்புவதாகவும் கூறினர். மேலும் இந்தியாவுடன் கடல் உணவு மற்றும் மரம் சார்ந்த வர்த்தகத்தைப் பெருக்க ரஷ்யா விரும்புகிறது என்ற கருத்தையும் வெளியிட்டார். நிறைவாக எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் கூட்டத்திற்கு நன்றி கூறினார்.

**வாங்குவோர் - விற்போர் சந்திப்பு**

இந்த பயணத்தின் போது கடல் உணவு பொருட்கள் தொடர்பான வாங்குவோர் - விற்போர் சந்திப்பு ஒன்றை எம்.பி.இ.டி.எ. ஏற்பாடு செய்திருந்தது. மாஸ்கோ சேம்பர் ஆஃப் காமர்

சில் இருந்து பதினோறு இறக்குமதியாளர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

திரு.ஆர்ச்சிமேன் லகிரி, துணை இயக்குநர், எம்.பி.இ.டி.எ. ரஷ்யாவுடனான இந்தியாவின் கடல் உணவு வர்த்தகம் என்ற தலைப்பில் ஒரு விளக்கவுரை நடத்தினார். அச்சமயம் ரஷ்யாவுடனான கடல் உணவு வர்த்தகம் தொடர்பான புள்ளிவிவரங்களைத் தொகுத்து வழங்கினார். மேலும் இந்திய ஏற்றுமதியாளர்களை அனைவருக்கும் அறிமுகம் செய்து வைத்தார். மேலும் இந்த நிகழ்ச்சிக்கு வருகைதந்த ரஷ்ய இறக்குமதி யாளர்களுக்கு நன்றி கூறினார்.

எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் கூட்டத்தில் பேசும் போது ஏற்றுமதி யாளர்களும், இறக்குமதியாளர்களும் இருதரப்பிற்கும் பயன் கிடைக்கும் விதத்தில் வர்த்தகத்தை முன்நடத்திச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஏற்றுமதியாளர்களும், இறக்குமதியாளர்களும் ஒருவருக் கொருவர் நேரடியாக எதிர்கால வர்த்தகம் குறித்து கலந்துரையாடினர். இருதரப்பினரும் நிறைவான மனதுடன் இதுபோன்ற ஆக்கபூர்வ மான சந்திப்புகள் அடிக்கடி நடக்க வேண்டும் என்று கூறினர்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ரஷ்ய இறக்குமதி யாளர்களின் விபரம்:

M/s.Uhrenholt LLC, M/s. Ultra Fish Group, M/s. Sky Fish LLC, M/s. Resfood Trading Company, M/s. JSC Russkaya Rybnaya Compania RusFish and M/s. LLC La Maree and Belgorod Region representatives M/s. Magnum LLC, M/s. Eastern Seafood LLC and M/s. Delfood Ltd. ஆகிய ரஷ்ய இறக்குமதியாளர்கள் கலந்து கொண்டனர்.

**இந்திய தூதரகச் சந்திப்பு**

பயணத்தின் நிறைவு நாளின் போது இந்தியப் பிரதி நிதிகள் இந்திய தூதரகத்தின் அதிகாரிகளைச் சந்தித்தனர். திரு.ஜி.பாலசுப்ரமணியன், டெபுடி சீஃப் ஆஃப் மிஷன், திரு.இன்ப சேகர் எஸ். கவுன்சிலர், எகனாமிக் மற்றும் கமர்சியல் பிரிவின் தலைவர், மற்றும் திரு.ஜார்ஜ் தாமஸ், இரண்டாம் செயலர், ஆகியோர் இந்த சந்திப்பின் போது இருந்தனர்.

இந்தியாவின் இந்த ரஷ்யப் பயணத்தின் காரணமாக பயனுள்ள செயல்பாடுகளுக்குத் துவக்கம் குறிக்கப்பட்டுள்ளது என்று கூறினார். எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் தூதரக அதிகாரிகள் முன்வந்து இந்திய ஏற்றுமதியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ரஷ்யன் பெடரேசனில் வியாழக்கிழமை என்பது மீன் தினம் என்பதால் ரஷ்யாவில் இந்தியாவின் மீன் வர்த்தகம் பெருகுவதற்கான வழிமுறைகள் ஆலோசிக்கப்பட்டது. டி.சி.எம். பேசும் போது ஜப்பானில் உள்ள தரநிர்ணய முறையை ரஷ்யா பின்பற்றும் பட்சத்தில் இந்தியாவின் மீன் வர்த்தகம் பிரபலமடையும் என்று கருத்துத் தெரிவித்தார்.

எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் இந்த பயணம் வெற்றிகர மாக அமைந்ததற்கு தூதரக அதிகாரிகளுக்கு நன்றி கூறினார். குறிப்பாக திரு.ஜார்ஜ் தாமஸ் அவர்களின் உதவி மகத்தானது என்று கூறினார்.



# ஃபுட் புராசசிங் கான்கிலேவ் - 2018 கொல்கத்தா




*கருத்தரங்கில் கலந்து கொண்ட பேச்சாளர்கள்*

கடந்த மார்ச், 2018ல் கொல்கத்தாவில் கான்ஃபிடரேசன் ஆஃப் இந்தியன் இண்டஸ்ட்ரி ஏற்பாடு செய்திருந்த ஃபுட் புராசசிங் என்ற ஒரு நாள் கருத்தரங்கில் எம்.பி.இ.டி.எ.வும் கலந்து கொண்டது. இதில் எம்.பி.இ.டி.எ. Safety and Sustainability in Food Processing என்ற தலைப்பில் கருத்துக்களை வழங்கிட அழைக்கப்பட்டது.

மேற்கு வங்க அரசின் ஃபுட் புராசசிங் இண்டஸ்ட்ரி & ஹார்ட்டிக்கல்சர் துறையின் அமைச்சர் திரு.அப்தில் ரசாக், இந்த நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார். திரு.ஆசிஷ் பகுகுணா, இ.ஆ.ப. தலைவர் எஃப்.எஸ்.எஸ்.எ.ஐ.சிறப்பு விருந்தினராக இருந்தார். திரு.பி.சுமந்த், தலைவர், சி.ஐ.ஐ. கிழக்குப் பகுதி, திரு.பிரதிப் குமார் மஜும்தார், முதலமைச்சரின் ஆலோசகர், திரு.அமித்சரயோகி, இணைத் தலைவர், சி.ஐ.ஐ. & அன்மோல் ஃபீட்சின் நிர்வாக இயக்குநர், ஆகியோர் துவக்க விழா நிகழ்ச்சிகளில் உரையாற்றினர்.

திரு.மஜும்தார் அந்த மாநிலத்தின் வேளாண்துறையின் நிலைமையை எடுத்துக் கூறினார். மேற்கு வங்கத்தில் நெல், பழங்கள், மற்றும் காய்கறிகளின் உற்பத்தி அதிகமாக இருப்பதால் இவைகளின் வளர்ச்சி தொடர்பான திட்டங்கள் செயல் படுத்தப்படுவதாகக் கூறினார்.

திரு.அப்துல் ரசாக், அமைச்சர் பேசும் போது மாநில அரசு தரச் சோதனைக்கான வசதிகள், விவசாயிகளுக்கு தெளிப்பு நீர்ப்பாசனம் மற்றும் சுடு நீர் நிலையங்கள் போன்றவற்றை அமைத்துத் தரும் வேலைகளில் ஏற்கனவே ஈடுபட்டுள்ளதாகக் கூறினார். மேலும் அவர் கூறும் போது ஐரோப்பிய மார்க்கெட்களுக்கு லிச்சியை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளதாகக் கூறினார்.

தற்சமயம் வேளாண் அமைச்சகம் மற்றும் அபெடாவிற்கு ஆர்கானிக் உணவு உற்பத்தியில் தனித் தனியான கொள்கைகள் உள்ளன. திரு.ஆசிஷ் பகுகுணா பேசும் போது ஒரே நிலையான ஆர்கானிக் உணவு உற்பத்தித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அவை பொதுமக்களின் பார்வைக்கு கொண்டுவர வேண்டும் என்ற கருத்தைக் கூறினார்.

பிற்பகலில் தொழில்நுட்ப அமர்வு தொடங்கியது. இதில் மாடரேட்டராக திரு.சுமந்த், தலைவர்.சி.ஐ.ஐ. இருந்தார். பேச்சாளர்களாக திரு.அல்பிந்தர் தின்சா, இணை ஸ்தாபகர், குரோஃபெர்ஸ், திரு.ஹரிஷ் சர்மா, தலைவர், ஸ்பைசஸ் & டிரை ஃபுருட்ஸ் & ஆர்கானிக்ஸ்,ஆதித்யா பிர்லா, திரு.சோம்நாத்




*திரு.எஸ்.ஏஸ்.ஷாஜி பாதுகாப்பான உணவு மற்றும் நிலைப்புத்தன்மை குறித்து பேசுகின்றார்.*

சாட்டர்ஜி, தலைமை, புரக்யூர்மெண்ட் & லாஜிஸ்டிக், ஐ.டி.சி.லிட், திரு.ஆசிஷ் திபிரிவால், ரீஜினல் பிசினஸ் ஹெட், பிக் பேகெட், மற்றும் திரு.பங்கஜ் மூனா, பிசினஸ் ஹெட், வீட் புராடக்ட்ஸ், அதாணி வில்மர் லிட். ஆகியோர் இருந்தனர்.

இரண்டாவது கூட்டத்தில் உணவு பாதுகாப்பு & நிலைப்புத் தன்மை என்பதில் நடந்தது. திரு.ஆர்.கெ. மோண்டல், டெபுடி ஜெனரல் மேனேஜர், அபெடா, திரு.ஸ்ரீனிவாஸ் ரெட்டி, சீனியர் ஜெனரல் மேனேஜர், புளூஸ்டார் இந்தியா, திரு.பீர் முகமது, உதவி இயக்குநர், இ.ஐ.எ. மற்றும் திரு.எஸ்.எஸ்.ராஜி, துணை இயக்குநர், ரீஜினல் டிவின், கொல்கத்தா, ஆகியோர் பேச்சாளர்களாகவும், முனைவர்.இந்திராணி கோஷ், ஸ்டேரஜிக் அட்வைசர், ஃபுட் சேப்டி &சஸ்டெய்னபிலிட்டி, சி.ஐ.ஐ. மாடரேட்டராகவும் இருந்தார். கடல் உணவு பாதுகாப்பு மற்றும் தாக்குப்பிடித்தலில் எம்.பி.இ.டி.எ. கடைப்பிடித்துவரும் செயல் முறைகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

இந்தக் கூட்டம் பிசினஸ் டு பிசினஸ் மற்றும் ஃபார்மர் டு பிசினஸ் என்ற அமர்வுகளுடன் நிறைவுபெற்றது.



# மார்ச் 2018ல் இந்தியாவில் குறிப்பிட்ட துறைமுகங்களில் மீன் வரத்தின் சிறப்பம்சங்கள்

அதானு ராய், வி.வி.அஃப்சல், என்.ஜே.நீத்து, & ஜோய்சி வி தாமஸ்
நெட்ஃபிஷ் – எம்.பி.இ.டி.எ

இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்குக் கடற்கரைப் பகுதி களிலுள்ள முக்கியமான மீன்பிடித் துறைமுகங்களில் வந்த மீன்பிடிப் படகுகளின் வரத்துக்களை, நெட்ஃபிஷ், எம்.பி.இ.டி.எ.வின் கேட்ச் சர்ட்டிபிகேசன் சிஸ்டத்திற்காக பதிவு செய்தது. நெட்ஃபிஷ் இந்தியா, ஒன்பது கடல் சார்ந்த மாநிலங்களில் அமைந்திருக்கும் சுமார் 47 முக்கிய துறைமுகங்களில் வந்து சேரும் மீன்களின் கணக்கைக் கவனித்து வருகிறது. (அட்டவணை1). இவ்வாறு சேகரிக்கப்பட்ட விவரங்களை ஆய்வுசெய்து மீன்களை இன வாரியாகவும், மாநிலவாரியாகவும், துறைமுக வாரியாகவும் பிரித்து வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிக்கை மார்ச் 2018ல் இந்தியாவின் முக்கியமான துறைமுகங்களில் வந்து சேர்ந்த மீன்களின் புள்ளிவிவரங்களைக் கூறுகிறது.


அட்டவணை 1: புள்ளிவிவரத்திற்காகத் தேர்வு செய்யப்பட்ட துறைமுகங்கள் மற்றும் கரையிறங்கும் மையங்கள்

| Sl. No. | State | Fishing harbour |
|---|---|---|
| 1 | Kerala | Beypore |
| 2 | | Puthiyappa |
| 3 | | Thoppumpady |
| 4 | | Munambam |
| 5 | | Sakthikulangara |
| 6 | | Thottapally |
| 7 | | Kayamkulam |
| 8 | | Vizhinjam |
| 9 | Karnataka | Mangalore |
| 10 | | Malpe |
| 11 | | Gangoli |
| 12 | | Tadri |
| 13 | | Karwar |
| 14 | | Honnavar |
| 15 | Maharashtra | Harne |
| 16 | Maharashtra | New Ferry Wharf |
| 17 | | Ratnagiri (Mirkarwada) |
| 18 | Gujarat | Sasson Dock |
| 19 | | Veraval |
| 20 | | Porbandar |
| 21 | | Mangrol |
| 22 | West Bengal | Digha (Sankarpur) |
| 23 | | Deshapran |
| 24 | | Namkhana |
| 25 | | Sultanpur |
| 26 | | Kakdwip |
| 27 | | Raidigi |
| 28 | Odisha | Paradeep |
| 29 | | Balaramgadi |
| 30 | | Bahabalapur |
| 31 | | Dhamara |
| 32 | Andhra Pradesh | Kakinada |
| 33 | | Machilipatnam |
| 34 | | Nizampatnam |
| 35 | | Visakhapatnam |
| 36 | Tamil Nadu | Chennai |
| 37 | | Pazhaiyar |
| 38 | | Nagapattinam |
| 39 | | Tuticorin |
| 40 | | Cuddalore |
| 41 | | Mandapam |
| 42 | | Colachel |
| 43 | Tamil Nadu | Pondicherry |
| 44 | | Karaikal |
| 45 | | Chinnamuttom |
| 46 | Goa | Cutbona |
| 47 | | Malim |


## கிடைத்த மீன்களின் அடிப்படையில் மதிப்பீடு

மார்ச் 2018ல் தேர்வு செய்யப்பட்ட 47 துறைமுகங்கள் மற்றும் கரையிறங்கும் மையங்களில் சுமார் 62,203.72 டன் மீன் கிடைத்ததாக பதிவாகியுள்ளது. இதில் அதிகமான அளவிலான 27,282.94 டன் (47 சதவீதம்) ஆழ்கடல் மீன்பிடித்தலின் மூல மாகக் கிடைத்ததாகும். இதனைத் தொடர்வது கடலடிவாழ் மற்றும் ஷெல்பிஷ் வகை மீன்கள் மூலமாக, முறையே 20,134.22 டன் (32 சதவீதம்) 17,815.32 டன் (29 சதவீதம்) ஆகும். (வரை படம்.1)

சுமார் 114 வகையான மீன்கள் இந்த மாதம் கிடைத்தன. அவற்றை வரிசைப்படுத்திய போது முதல் ஐந்து இடத்தில் இருப்பவை, ஊசிக்கணவாய், சங்கரா, அயிலை, வாளை, மற்றும் கணவாய், என்பனவாகும்.(வரை படம்-2) இந்த ஐந்தும் சேர்ந்து மொத்த அளவில் 38 சதவீதமாகும். (வரை படம்:2) மேற்குறிப்பிட்ட ஐந்து வகை மீன்களைத்தவிர, சூரை மீன், கத்தாளை,




*வரைபடம் 1: மார்ச் 2018ல் இனவாரியான மீன் வரத்து*




*வரைபடம் 2: மார்ச் 2018ல் கிடைத்த முக்கியமான மீன்கள்*


தும்பிளி, மற்றும் சாளை ஆகிய மீன்களின் வரத்து ஒவ்வொன்றும் மொத்தத்தில் 2,000 டன்களுக்கும் அதிகமாகவே இருந்தது. இம் மாதம் மிகக் குறைந்த அளவில் கிடைத்தது கன்னிப்பாறை ஆகும். (0.10 டன்)

மார்ச் 2018ல் இனம் மற்றும் அளவுப்படி வரிசைப்படுத்திய விவரத்தை அட்டவணை 2ல் காணலாம். ஆழ்கடல் மீன் வரிசையில் அயிளை, வாளை மற்றும் சூறை மீன்கள் அதிகமான அளவிலும், கடலடி மீன் வகையில், சங்கரா, கத்தாளை, மற்றும் தும்பிளி மீன்கள் முன்னணியில் இருந்தன. ஷெல்ஃபிஷ் வகையில் கிடைத்தவையில் மொலுஸ்கேன் இனத்தைச் சேர்ந்த கணவாய், ஊசிக்கணவாய், ஆக்டோபஸ், ஆகியவை 58 சதவீதமும், மீதமுள்ள 42 சதவீதம் கிரஸ்டாசியன் வகையில் பினாயிட் இறால் அதிக அளவில் இருந்தாலும், கரிகாடி இரால் அதிக அளவில் இருந்தது.(1,431.35 டன்)


அட்டவணை 2: மார்ச் 2018ல் இனவாரியான மீன்களின் பட்டியல்

| Fishery item | Quantity in tons | % of total catch |
|---|---|---|
| **Pelagic Finfish** | | |
| Indian Mackerel | 5049.11 | 8.12 |
| Ribbon Fish | 4061.06 | 6.53 |
| Tuna | 3549.89 | 5.71 |
| Indian Oil Sardine | 2254.56 | 3.62 |
| Anchovies | 2067.72 | 3.32 |
| Scads | 1359.45 | 2.19 |
| Seer Fish | 1323.97 | 2.13 |
| Barracuda | 1235.82 | 1.99 |
| Horse Mackerel | 723.03 | 1.16 |
| Dolphin Fish | 579.88 | 0.93 |
| Lesser Sardines | 398.05 | 0.64 |
| Bombay Duck | 325.33 | 0.52 |
| Leather Jacket | 255.55 | 0.41 |
| Trevally | 229.38 | 0.37 |
| Oriental Bonito | 158.70 | 0.26 |
| Sail Fish | 116.27 | 0.19 |
| Marlins | 84.56 | 0.14 |
| Herrings | 80.19 | 0.13 |
| Mullet | 78.59 | 0.13 |
| Needle Fish | 64.12 | 0.10 |
| Queenfish | 53.97 | 0.09 |
| Hilsa | 48.00 | 0.08 |
| Cobia | 41.27 | 0.07 |
| Sea Bass | 38.18 | 0.06 |
| Indian Salmon | 29.33 | 0.05 |
| Flat Needle Fish | 26.89 | 0.04 |
| Indian Ilisha | 13.88 | 0.02 |
| Silver Sillago | 7.40 | 0.01 |
| Indian Thread Fish | 0.10 | 0.00 |
| **Total** | **24254.18** | **38.99** |
| **Demersal Finfish** | | |
| Japanese Thread Fin Bream | 5644.60 | 9.07 |
| Croakers | 2753.86 | 4.43 |
| Lizard Fish | 2479.15 | 3.99 |
| Bull's Eye | 2151.36 | 3.46 |
| Sole Fish | 1821.95 | 2.93 |
| Cat Fish | 1452.54 | 2.34 |
| Snapper | 1112.80 | 1.79 |
| Moon Fish | 1003.01 | 1.61 |
| Reef Cods | 570.08 | 0.92 |
| Pomfrets | 447.24 | 0.72 |
| Pony Fish | 233.87 | 0.38 |
| Goat Fish | 145.17 | 0.23 |
| Eel | 139.70 | 0.22 |
| Rays | 115.30 | 0.19 |
| Emperor Bream | 16.31 | 0.03 |
| Ghol | 11.85 | 0.02 |
| Indian Halibut | 11.42 | 0.02 |
| Parrot Fish | 5.10 | 0.01 |
| Whip Fin Silver Biddy | 3.70 | 0.01 |
| Perch | 3.08 | 0.00 |
| Black Tip Shark | 2.70 | 0.00 |
| Perchlet | 2.27 | 0.00 |

| | | |
|---|---|---|
| Filefish | 1.50 | 0.00 |
| Yellow Fin Sea Bream | 1.45 | 0.00 |
| Spine Foot | 1.40 | 0.00 |
| Batfish | 1.27 | 0.00 |
| Pigmy Devil Ray | 1.20 | 0.00 |
| Sickle Fish | 0.36 | 0.00 |
| **Total** | **20134.22** | **32.37** |
| **Shellfish** | | |
| ***Crustaceans*** | | |
| Penaeid shrimps | 6678.36 | 10.74 |
| Non-penaeid shrimps | 113.20 | 0.18 |
| Sea Crab | 722.40 | 1.16 |
| Mud Crab | 14.32 | 0.02 |
| Lobsters | 9.77 | 0.02 |
| **Total crustaceans** | **7538.04** | **12.12** |
| ***Mollusc*** | | |
| Squid | 5922.28 | 9.52 |
| Cuttlefish | 3145.99 | 5.06 |
| Octopus | 1202.11 | 1.93 |
| Clam | 6.90 | 0.01 |
| **Total Mollusc** | **10277.28** | **16.52** |
| **Total Shellfish** | **17815.32** | **28.64** |
| **Grand Total** | **62203.72** | **100.00** |




*வரைபடம் 3. மார்ச் 2018ல் மாநிலம்வாரியாக கிடைத்த மீன்களின் அளவு*




*வரைபடம் 4 ஒவ்வொரு மாநிலத்திலும் இனவாரியாகக் கிடைத்த மீன்களின் ஒப்பீடு (டன்களில்)*

## மண்டலவாரியான அளவு

நான்கு மீன்பிடிப்பகுதிகளில் தென்மேற்குக் கடற்கைரை என்பது கேரளா, கா்நாடகம் மற்றும் கோவா கடற்கரைப் பகுதி களுக்குட்பட்ட 16 துறைமுகங்கள் அடங்கியதாகும். இந்த மாதம் இதரப் பகுதிகளைவிட அதிகமான அளவில் சுமாா் 28,775.03 டன் (46 சதவீதம்) கிடைத்துள்ளது.

இதனைத் தொடா்வது வடமேற்குக் கடற்கரைப் பகுதி யில் (மகாராஷ்டிரா, மற்றும் குஜராத்) தேர்வு செய்யப்பட்ட ஏழு துறைமுகங்களிலிருந்து) அதிக அளவாக 23,569.26 டன் கிடைத்துள்ளது. இவ்வாறு, வடமேற்குக் கடற்கரைப் பகுதியில் மொத்தத்தில் 38 சதவீத அளவிலான மீன் கிடைத்துள்ளது. (வரை படம் 3) இவ்வாறு மேற்குக் கடற்கரைப் பகுதியில் மொத்தத்தில் 84 சதவீதம் மீன்கள் கிடைத்துள்ளது.

தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம் அடங்கிய 14 துறைமுகங்களில் கிடைத்த கடல்மீன்களின் வரத்து 5,371.49 டன் களாகும். (மொத்த அளவில் ஒன்பது சதவீதம்) அதே சமயம் வடகிழக்குப் பகுதியில் ஒடிசா, மற்றும் மேற்கு வங்கத்தில் தேர்வு செய்யப்பட்ட 10 இடங்களில் குறைத்த அளவிலான 4,487.94 டன்கள் (ஏழு சதவீதம்) அளவிலான மீன்கள் பதிவாகியுள்ளது.


தென்மேற்கு மற்றும் வட மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் ஆழ்கடல் மீன்கள் அதிக அளவில் கிடைத்தது. (வரை படம் 4) அதேபோல, வடமேற்குப் பகுதியில் கடலடிவாழ் மீன்கள் அதிக மாகவும், தென் கிழக்குப் பகுதியில் ஷெல்ஃபிஷ் வரத்து மற்ற இரண்டு ரகங்களைவிட அதிகமாக இருந்தது. (வரைபடம்-4)

ஒவ்வொரு பகுதிகளிலும் அதிகமாகக் கிடைத்த ஐந்து ரக மீன்களின் பட்டியல் அட்டவணை 3ல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை3: மார்ச் 2018ல் ஒவ்வொரு மாநிலத்திலும் கிடைத்த முக்கியமான மீன்கள்

| Item | Quantity in tons | % of total landings of the region |
|---|---|---|
| **South West** | | |
| Indian mackerel | 3589.83 | 12.48 |
| Japanese Thread fin bream | 2914.72 | 10.13 |
| Squid | 1930.05 | 6.71 |
| Indian Oil Sardine | 1833.21 | 6.37 |
| Lizard fish | 1646.61 | 5.72 |
| North West | | |
| Squid | 3477.11 | 14.75 |
| Ribbon Fish | 3239.15 | 13.74 |
| Japanese Thread fin bream | 2559.59 | 10.86 |

| | | |
|---|---|---|
| Cuttlefish | 1264.90 | 5.37 |
| Croaker | 1245.61 | 5.28 |
| **South East** | | |
| Tuna | 904.76 | 16.84 |
| Cuttlefish | 541.51 | 10.08 |
| Brown Shrimp | 358.56 | 6.68 |
| Squid | 324.21 | 6.04 |
| White Prawn | 311.54 | 5.80 |
| **North East** | | |
| Croaker | 692.398 | 15.43 |
| Marine Shrimp (Karikkadi) | 457.463 | 10.19 |
| Ribbon Fish | 266.799 | 5.94 |
| Indian Oil Sardine | 255.884 | 5.70 |
| Bombay Duck | 218.640 | 4.87 |




*வரைபடம் 5: மார்ச் 2018ல் மாநிலவாரியாகக் கிடைத்த அளவுகள் (டன்களில்)*

## மாநிலவாரியான வரத்து

இந்தியாவின் முக்கியமான ஒன்பது கடற்கரை சார்ந்த மாநிலங்களில் குஜராத்தில் இம்மாதம் அதிகப்படியான அளவான 17,440.24 டன் மீன் வந்துள்ளது. இது மொத்த அளவில் 28 சதமாகும். (வரைபடம் 5) குஜராத்திற்கு அடுத்ததாக கேரளாவில் 16,467.64 டன் வந்துள்ளது. இது மொத்த அளவில் 26சதவீத மாகும்.

கர்நாடகம் 7,837.79 டன்களுடன் மூன்றாவது இடத்தி லுள்ளது (12 சதவீதத்திற்கும் அதிகமாக). மேற்குக் கடற்கரை மாநிலங்கள் அனைத்தும் கிழக்குக் கடற்கரை மாநிலங்களைப் பின்தள்ளி முன்னேறியுள்ளன. கிழக்குக் கடற்கரைப் பகுதியில் தமிழ்நாட்டில் அதிக அளவான 2,996.27 டன் (சுமார் ஐந்து சதவீதம்) பதிவாகியுள்ளது. மிகக் குறைவான மீன் வரத்து பதி வாகியுள்ள மாநிலம் ஒடிசாவாகும். இங்கு 1,897.21 டன் மட்டுமே கிடைத்துள்ளது.

அட்டவணை 4: மார்ச் 2018ல் கிடைத்த முக்கியமான இனங்களின் பட்டியல்


| Item | Quantity in tons | % of total landings of the state |
|---|---|---|
| **Kerala** | | |
| Indian Oil Sardine | 1310.22 | 7.96 |
| Squid | 1191.69 | 7.24 |
| Cuttlefish | 1100.52 | 6.68 |
| Indian mackerel | 1051.40 | 6.38 |
| Tuna | 1028.55 | 6.25 |
| **Karnataka** | | |
| Japanese Thread fin bream | 1923.63 | 24.54 |
| Indian mackerel | 1097.43 | 14.00 |
| Lizard fish | 879.02 | 11.22 |
| Indian Scad | 813.54 | 10.38 |
| Indian Oil Sardine | 487.99 | 6.23 |
| **Goa** | | |
| Indian mackerel | 1441.00 | 32.24 |
| Moon fish | 764.55 | 17.11 |
| Japanese Thread fin bream | 465.90 | 10.42 |
| Horse mackerel | 317.20 | 7.10 |
| Squid | 311.00 | 6.96 |
| Maharashtra | | |
| Ribbon Fish | 734.15 | 11.98 |
| Squid | 647.61 | 10.57 |
| Indian mackerel | 624.74 | 10.19 |
| Japanese Thread fin bream | 590.39 | 9.63 |
| Brown Shrimp | 473.08 | 7.72 |
| **Gujarat** | | |
| Squid | 2829.50 | 16.22 |
| Ribbon Fish | 2505.00 | 14.36 |
| Japanese Thread fin bream | 1969.20 | 11.29 |
| Cuttlefish | 1232.00 | 7.06 |
| Cat fish | 1058.60 | 6.07 |
| **Tamil Nadu** | | |
| Cuttlefish | 511.27 | 17.06 |
| Tuna | 415.12 | 13.85 |
| Squid | 280.43 | 9.36 |
| Indian Oil Sardine | 150.59 | 5.03 |
| Pink Shrimp | 103.32 | 3.45 |
| **Andhra Pradesh** | | |
| Tuna | 489.65 | 20.61 |
| Brown Shrimp | 315.19 | 13.27 |
| White Prawn | 239.13 | 10.07 |
| Pink Shrimp | 203.95 | 8.59 |
| Ribbon Fish | 172.72 | 7.27 |
| **Odisha** | | |
| Croaker | 378.56 | 19.95 |
| Marine Shrimp (*Karikkadi*) | 276.12 | 14.55 |
| Ribbon Fish | 122.24 | 6.44 |
| Golden anchovy | 114.35 | 6.03 |
| Sea Crab | 111.44 | 5.87 |
| **West Bengal** | | |
| Croaker | 313.84 | 12.11 |
| Bombay Duck | 192.53 | 7.43 |
| Marine Shrimp (*Karikkadi*) | 181.34 | 7.00 |
| Indian Oil Sardine | 178.12 | 6.88 |
| Cuttlefish | 157.36 | 6.07 |

## துறைமுகவாரியான மீன் வரத்து

இம்மாதத்தில் மேற்கு மற்றும் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் தேர்வு செய்த துறைமுகங்கள் வாரியாகக் கிடைத்த மீன்களின் அளவு பற்றிய வரைபடம் 6, 7 ஆகும். மொத்தமுள்ள 47 துறைமுகங்களில் பேபூர் துறைமுகத்தில் அதிக அளவான 11,518.08 டன் (18 சதவீதம்) மீன் வரத்து பதிவாகியுள்ளது. இதனைத் தொடர்வது குஜராத்தில் போர்பந்தர் துறைமுகமாகும். இங்கு




*வரைபடம் 6: மார்ச் 2018ல் மேற்குக் கடற்கரை துறைமுகங்களில் கிடைத்த அளவுகள் (டன்களில்)*




*வரைபடம் 7: மார்ச் 2018ல் கிழக்குக் கடற்கரை துறைமுகங்களில் கிடைத்த அளவுகள் (டன்களில்)*

6,514.74 டன் (10 சதவீதம்) பதிவாகியுள்ளது.

வேராவல் துறைமுகத்தில் 5,891.50 டன்னும் (9 சதம்) மங்களூர் துறைமுகத்தில் 5,391.12 டன்னும் (8 சதம்) அடுத்த இடத்தில் பதிவாகி உள்ளது. கிழக்குக் கடற்கரை துறைமுகத்தில் விசாகப்பட்டினத்தில் அதிகமான வரத்தாக 1,660.32 டன் (இரண்டு சதவீதம்) பதிவாகியுள்ளது. மிகவும் குறைவான அளவான 19.09 டன் பதிவாகியுள்ள இடம் தமிழகத்திலுள்ள சின்னமுட்டம் துறைமுகமாகும்.

## படகுகளின் வரவின் அடிப்படையிலான மதிப்பீடு

மார்ச் 2018ல் வந்த மொத்த படகுகளின் எண்ணிக்கை 27,512 ஆகும். இதில் அதிகபட்சமாக 3,786 படகுகள் வந்துள்ளது விராவல் துறைமுகத்திலாகும். இதனைத் தொடர்ந்து போர்பந்தர் துறைமுகத்தில் 2,883 படகுகள் வந்துள்ளன. மொத்தமுள்ள 47 துறைமுகங்களில் நான்கு இடங்களில் 1000ற்கும் அதிக மான படகுகள் வந்துள்ளன. இது குறித்த விவரம் அட்டவணை 5ல் உள்ளது. மீன்பிடிப்படகுகளில் 75 சதவீதம் மீன்பிடிக் கப்பல் வகையைச் சேர்ந்தவை. மற்றவை பர்ஸ் சீனிங், ரிங் சீனிங், கில்னெட்டர்ஸ் மற்றும் பாரம்பரிய கட்டுமர வகையைச் சேர்ந்தவைகளாகும்.

அட்டவணை 5: மார்ச் 2018ல் 1000 படகுகளுக்கும் அதிகமாக வந்த துறைமுகங்கள்

| Sl. No. | Fishing harbours | State | Number of boat landings |
|---|---|---|---|
| 1 | Veraval | Gujarat | 3786 |
| 2 | Porbandar | Gujarat | 2883 |
| 3 | Mangrol | Gujarat | 2504 |
| 4 | Mangalore | Karnataka | 1763 |

## ஒப்பீட்டு பகுத்தாய்வு

அட்டவணை 6ல் மார்ச் மாதத்தை, முந்தைய மாதங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். மார்ச் மாதத்தில் பிப்ரவரி மாதத்தைவிட 750 டன் அதிகமாகக் கிடைத்துள்ளது. மொத்த அளவில் ஐந்து சதவீதம் குறைவாக இருந்தாலும், ஆழ்கடல் மீன் பிடித்தல் சென்ற மாதத்தைவிட அதிகரித்துள்ளது. கடலடிவாழ் மீன்களின் வரத்து இரண்டு சதவீதம் அதிகரித்து இருந்தாலும், ஷெல்பிஷ் வரத்து மூன்று சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த மாதப் பங்களிப்பில் ஊசிக்கணவாயின் வரத்து ஒன்பது சதவீதம் அதிக மாக இருந்தது. அதிகமான மீன் வரத்தில் பேபூர் முதலிடத்தையும், குஜராத்திலுள்ள வேராவல் இரண்டாவது இடத்திலும் உள்ளது. பிப்ரவரி மாதத்தைவிட மார்ச் 2018ல் 500 படகுகள் அதிகமாக வந்துள்ளது.


அட்டவணை 6: ஒப்பீட்டு பகுத்தாய்வு

| | January 2018 | February 2018 | March 2018 |
|---|---|---|---|
| Total Catch | 86,568.64 t | 61,463.55 t | 62,203.72 t |
| Landing of Pelagic finfishes | 37,443.01 t (43%) | 27,282.94 t (44%) | 24,254.18 t (39%) |
| Landing of Demersal finfishes | 27,540.88 t (32%) | 18,369.24 t (30%) | 20,134.22 t (32%) |

| | | | |
|---|---|---|---|
| Landing of Shellfishes | 21,584.75 t (25%) | 15,811.37 t (26%) | 17,815.32 t (29%) |
| Species recorded highest landing | Ribbon fish (9%) | Squid (10%) | Squid (9%) |
| State recorded highest landing | Gujarat (30%) | Gujarat (32%) | Gujarat (28%) |
| Harbour recorded highest landing | Beypore (13%) | Veraval (14%) | Beypore (18%) |
| Total Boat Arrivals | 33,568 | 26,964 | 27,512 |

### சுருக்கம்

மார்ச் 2018ல் 47 முக்கியமான துறைமுகங்களில் சுமார் 62,203.72 டன் மீன் பிடித்தல் நடந்துள்ளது. இதில் ஆழ்கடல் மீன்பிடிப்பு, ஷெல்ஃபிஷ் மற்றும் கடலடிவாழ் மீன்பிடிப்பைவிட அதிக அளவில் இருந்துள்ளது. மொத்த அளவில் ஊசிக்கணவாய் மீனின் வரத்து அதிகமாக இருந்துள்ளது. மேற்குக் கடற்கரை மாநிலங்கள் மொத்தத்தில் 84 சதவீதமும், தென்மேற்குக் கடற்கரைப் பகுதிகள் 46 சதவீதமும் பங்களித்துள்ளன. ஒன்பது கடற்கரை சார்ந்த மாநிலங்களில் குஜராத்தில் அதிகமான மீன் பிடிப்பு நடைபெற்றுள்ளது. மொத்தமுள்ள 47 துறைமுகங்களில் 14 இடங்களில் 1000 டன்களுக்கும் அதிகமான மீன் பிடித்தல் இருந்துள்ளது. பேபூர் துறைமுகத்தில் அதிகமான மீன் வரத்தும், விராவல் துறைமுகத்தில் மீன் மற்றும் படகுகளின் வரத்தும் அதிக மாக இருந்தது.



# ஒகி புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்காக பூத்துறையில் மினி கண்காட்சி



திரு.ஜெயபால் எ. துணை இயக்குநர் எம்.பி.இ.டி.எ. பார்வையாளர்களுடன் உரையாடும் காட்சி

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக எம்.பி.இ.டி.எ.வின் தூத்துக்குடியிலுள்ள துணை மண்டலப் பிரிவு அலுவலகம் மார்ச் 28, 2018ல் ஒரு மினி கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தது. செயிண்ட் ஜான், தி பேப்டிஸ்ட் கம்யூனிட்டி ஹாலில் இந்த கண்காட்சி நடைபெற்றது.

இந்த கண்காட்சியை ஏற்பாடு செய்தவர் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவிலைச் சேர்ந்த திரு.ரமேஷ் செல்லதுரை என்பவராவார். இவர் இப்போது ஜெர்மனியில் வாழ்ந்து வரும் இவர், அங்கு ஐரோப்பிய ஸ்பேஸ் ஏஜென்சியில் கிரவுண்ட் ஆபரேசன் மேனேஜராகப் பணியாற்றி வருகின்றார்.

மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் சுற்றுச் சூழல் எனும் பொருளில் நடத்தப்பட்ட இந்த கண்காட்சியில் பல்வேறு என்.ஜி.ஓ. நிறுவனங்களும், தனியார் மற்றும் மத்திய மாநில அரசுகளின் மீன்வளத்துறை நிறுவனங்களும் கலந்து கொண்டன. மீன்பிடித்தல் தொடர்பான கருவிகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. தொலைத் தொடர்பு கருவிகளான ஃபிஷ் ஃபைண்டர், ஜி.பி.எஸ். ரேடியோ டெலிபோன் போன்ற நவீனமான கருவிகளும் காட்சிப் பொருளாக இருந்தன. சுமார் 14 கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தூத்தூர் பகுதியைச் சேர்ந்த 500க்கும் அதிகமான மீனவர்கள் இந்த கண்காட்சியை கண்டு மகிழ்ந்தனர்.




கண்காட்சியை பார்வையிட வந்தவர்களுக்கு எம்.பி.இ.டி.எ.வின் செயல்பாடுகள் எடுத்துக் கூறப்படுகிறது

மேலும் இதே பொருள் விளக்கக் கூட்டம் ஒன்றும் இதே இடத்தில் நடத்தப்பட்டது. அப்போது எம்.பி.இ.டி.எ.வின் பல்வேறு செயல்பாடுகளும், நிதி உதவித் திட்டங்களும், நெட்ஃபிஷ்சின் நடவடிக்கைகளும் மீனவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. இந்த கண்காட்சியின் மூலமாக மத்திய மற்றும் மாநில அரசுகளின் மீனவர் நலனிற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களை மீனவர்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

# இம்பாலில் 105வது இந்தியன் சயின்ஸ் காங்கிரஸ்



*முனைவர்.ஹர்ஷ் வர்தன், சயின்ஸ் & டெக்னாலஜி துறையின் மாண்புமிகு மத்திய அமைச்சர், பிரைட் ஆஃப் இந்தியா எக்ஸ்போவைத் துவக்கி வைக்கின்றார்*

கடந்த மார்ச் 16, 2018ல் இம்பாலிலுள்ள மணிப்பூர் யுனிவர்சிட்டி கேம்பசில் 105வது இந்தியன் சயின்ஸ் காங்கிரசைப் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் துவக்கி வைத்தார். வடகிழக்கு மாநிலத்தில் இரண்டாவது முறையாக நடத்தப்படும் சயின்ஸ் காங்கிரஸ் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த காங்கிரசின் பொருள் Reaching the Unreached through Science and Technology என்பதாகும். முனைவர்.ஹர்ஷ் வர்தன், சயின்ஸ் & டெக்னாலஜி துறையின் மாண்புமிகு மத்திய அமைச்சர், முனைவர். நாஜ்மா ஹெப்துல்லா, மேதகு மணிப்பூர் ஆளுநர், திரு.பைரன் சிங், முதலமைச்சர், மணிப்பூர், திரு.ஜிதேந்திர சிங், வட கிழக்கு மாநில அபிவிருத்திக்கான மாநிலங்களுகான அமைச்சர், பேராசிரியர். அத்யா பிரசாத் பாண்டே, மணிபூர் பல்கலைக் கழகத் துணைவேந்தர், பேராசிரியர். அச்சுத சமந்தா, ஜெனரல் பிரசிடண்ட், ஐ.எஸ்.சி. அசோசியேசன் ஆகியோர் துவக்கவிழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.





*திரு,நரேந்திர மோடி, மாண்புமிகு பாரதப் பிரதமர் 105வது இந்தியன் சயின்ஸ் காங்கிரசைத் துவக்கி வைத்து உரையாற்றுகின்றார்*

பிரைட் ஆஃப் இந்தியா எக்ஸ்போவை முனைவர்.ஹர்ஷ் வர்தன், சயின்ஸ் & டெக்னாலஜி துறையின் மாண்புமிகு மத்திய அமைச்சர், துவக்கி வைத்தார்.

எம்.பி.இ.டி.எ. இந்த நிகழ்ச்சியில் கடல் உணவு மற்றும் நீர் உயிரின வளர்ப்பு போன்றவற்றை இந்த பகுதியில் பிரபலப்படுத்தும் முயற்சியில் கலந்து கொண்டது. மணிப்பூர் பகுதி மக்கள் மீனை




*கண்காட்சியை ஒருங்கமைத்த எம்.பி.இ.டி.எ.வின் அதிகாரிகள்*

விரும்பி உண்பவர்கள். மீன் மற்றும் மீன் சார்ந்த பொருட்கள் குறித்து மக்கள் ஆர்வத்துடன் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

எம்.பி.இ.டி.எ. வெளியிட்டுள்ள நீர் உயிரின வளர்ப்பு மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி தொடர்பான புத்தகங்களை மக்கள் விரும்பி வாங்கினர். காட்சிக் கூடத்தில் நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் மீனை சுகாதாரமான முறையில் கையாளும் விதத்தை விளக்கும் வீடியோ நாள் முழுவதும் காட்டப்பட்டது. எம்.பி.இ.டி.எ.வின் காட்சிக் கூடத்தை மாணவர்கள், மீன் வளர்ப்போர், விஞ்ஞானிகள் என்று பலதரப்பினர் ஆர்வத்துடன் வந்து கண்டு மகிழ்ந்தனர். எம்.பி.இ.டி.எ.வின் கொல்கத்தாவின் மண்டலப் பிரிவு மற்றும் குவாகாத்தியின் துணை மண்டலப் பிரிவின் அலுவலகங்கள் இந்த கண்காட்சியை ஒருங்கமைத்திருந்தனர்.



# ஒடிசாவில் எம்.எஸ்.எம்.இ. சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2018




***எம்.பி.இ.டி.எ.வின் ஒடிசா எம்.எஸ்.எம்.இ. சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2018யின் காட்சிக் கூடத்தின் தோற்றம்***

ஒடிசா அரசு எண்டரபிரனர்சிப் வீக் 2018 தொடர்பாக ஏற்பாடு செய்திருந்த எம்.எஸ்.எம்.இ. இண்டர்நேசனல் டிரேட் ஃபேர் 2018 மார்ச் 2018 5முதல் 10 வரை நடைபெற்றது. புவனேஷ்வரிலுள்ள ஐ.சி.ஐ.சி.ஓ. கண்காட்சி மைதானத்தில் நடைபெற்ற கண்காட்சியில் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் முறை பற்றியதாக இருந்தது.

திரு. நவீன்பட் நாயக், மாண்புமிகு ஒடிசா முதல்வர், இந்த கண்காட்சியைத் துவக்கி வைத்தார். திரு.பிரஃபுல்லா சாமல், எம்.எஸ்.எம்.இ. அமைச்சர், திரு.எல்.என்.குப்தா, இ.ஆ.ப. கூடுதல் முதன்மைச் செயலர், எம்.எஸ்.எம்.இ. துறை ஒடிசா அரசு, மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரமுகர்கள் துவக்க விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

கண்காட்சி அரங்கின் மையப் பொருள் உணவைப் பதப்படுத்துதல் என்பதாகும். எனவே உணவுப் பொருட்களைப் பதப்படுத்துதல், பொறியியல், இரசாயனம், அரசு சார்ந்த துறைகள், கைவினைப் பொருட்கள், மற்றும் டெக்ஸ்டைல்ஸ் துறையினர் கண்காட்சி அரங்கை அலங்கரித்தனர்.

எம்.பி.இ.டி.எ.வின் புவனேஷ்வரிலுள்ள மண்டலப் பிரிவு இந்தக் கண்காட்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தது. எம்.பி.இ.டி.எ.வின் செயல்பாடுகளை விளக்கும் விதத்திலான




***உகாண்டா ஹைகமினின் டெபுடி ஹைகமினர் திரு. கொலா முகமது பாஸ்வாரி எம்.பி.இ.டி.எ.வின் காட்சிக் கூடத்தைப் பார்வையிடும் காட்சி***

போஸ்டர்களும் பேனர்களும் காட்சிக் கூடத்தில் எழுப்பப்பட்டிருந்தன. முதல் நாளின் போது திரு.டி.டோலா சங்கர், ஐ.ஓ.எஃப்.எஸ். இயக்குநர், (மார்க்கெட்டிங்) எம்.பி.இ.டி.எ. மற்றும் திரு.எஸ்.எஸ். ஷாஜி, இயக்குநர், மண்டலப்பிரிவு, கொல்கத்தா ஆகியோர் காட்சிக் கூடத்தைப் பார்வையிட்டனர். திரு.எம்.சி.மொகப்பத்ரா, துணை இயக்குநர், திரு.தம்பட நரேஷ் விஷ்ணு, உதவி இயக்குநர், திரு.எஸ். துர்கா ராவ், ஃபீல்டு சூப்ரவைசர் மற்றும் புவனேஷ்வர் அலுவலகத் தின் அலுவலகர்கள் கண்காட்சிக் கூடத்தை நிர்வகித்தனர்.

எம்.பி.இ.டி.எ.வின் காட்டிக் கூடம் பெவிலியன் - 2 (ஹால்-பி, ஸ்டால் எண்.27) இந்த காட்சிக் கூடத்திற்கு வருகை புரிந்த பார்வையாளர்கள் இறால் பண்ணை அமைக்கும் முறை, குளம் கட்டுதல், குளத்தை நிர்வகிப்பது, கடல் உணவுப் பொருட்களை சோதனை செய்வது, பதப்படுத்துவது மற்றும் ஏற்றுமதி செய்வது, ஐஸ் பிளாண்ட் அமைப்பது, பதப்படுத்தும் நிலையம் அமைப்பது, மற்றும் நவீன முறைப்படி கையாளும் முறைகள், கடல் உணவுப் பொருட்களைப் பாதுகாக்கும் முறைகள் தொடர்பான விளக்கங்களைக் கேட்டறிந்தனர். இது போன்ற சந்தேகங்களுக்கு எம்.பி.இ.டி.எ.வின் அதிகாரிகள் உடனுக்குடன் விளக்கமளித்தனர். மேலும் பார்வையாளர்களுக்கு மீன் வளர்ப்பு மற்றும் பாதுகாப்பு முறைகளை விளக்கும் கையேடுகள் வழங்கப்பட்டன. காட்சிக் கூடத்திற்கு விவசாயிகள், தொழில் முனைவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என பலதரப்பினர் ஆர்வத்துடன் வந்து பார்வையிட்டனர்.

# எம்.எஸ்சி சான்றுக்காக தேர்வான பத்து இந்தியன் கடல் மீன் பிடிப்புகள்




*முனைவர். யெமி ஒலோருண்டுயி கூட்டத்தில் உரையாற்றுகின்றார்*

வெளிநாட்டுச் சந்தைகளில் நிலவும் வர்த்தக மதிப்பின் அடிப்படையில் இந்தியாவின் பத்து கடல் மீன் பிடித்தலுக்கு லண்டனிலுள்ள Marine Stewardship Council வழங்கும் Eco -labelling சான்றைப் பெறத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவை, தமிழ்நாட்டில், மண்டபத்தில் கில் நெட்டில் பிடிக்கப்பட்ட நீலநிற நீந்தும் நண்டு, கொல்லத்தில் பெரும் பைவலையில் கிடைத்த இறால், சிவப்பு ரிங் இறால், ஊசிக் கணவாய், கணவாய், மண்டபத்தில் பெரும் வலையில் கிடைத்த ஃபிளவர் இறால், நாகர்கோவில் மற்றும் கன்னியாகுமரியில் வலையில் கிடைத்த கல் லிறால், லட்சதீவில் தூண்டில் மற்றும் லைனில் கிடைத்த ஸ்கிப்ஜாக் சூறை மீன், தென் மேற்குக் கடற்கரையில் கிடைத்த சங்கரா ஆகியவையாகும். இதனைத் தேர்ந்தெடுத்த குழுவில் கடற்துறை விஞ்ஞானிகள், கடல் உணவு ஏற்றுமதியாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள், மற்றும் மீனவர்கள் இருந்தனர். மேலும் இந்த குழு இந்த மீன் பிடித்தலில் Fishery Improvement Projects எனும் மீன்பிடித்தலை மேம்படுத்தும் திட்டங்களை அமுல்படுத்த வேண்டும் என்று தீர்மானித்தது. எம்.எஸ்.சி. சான்றைப் பெறுவதற்கான வலுவான திட்டங்களையும் இந்த குழு ஆலோசனை செய்தது.

இந்த குழு மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தில் எம்.எஸ்.சி, சி.எம்.எஃப்.ஆர்.ஐ. மற்றும் World Wildlife Fund - India, ஆகிய நிறுவனகளின் தலைமையில் ஒன்று கூடி, எம்.எஸ்.சி. சான்று பெறுவதற்கான வழி முறைகளை வகைப்படுத்தி, இந்த துறையில் ஈடுபட்டுள்ள அனைவரின் ஒருமனதான முயற்சியோடு மீன் வள அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்தவும், எகோ லேபலிங் சான்றுபெற முயற்சிக்க வேண்டும் என்று தீர்மானித்தது. இந்த கூட்டத்தில் உறையாற்றிய பங்கீட்டாளர்கள் ஒழுங்கற்ற மீன்பிடிக்கும் முறையை கட்டுப்படுத்த வேண்டும் என்றும், இது போன்ற நடவடிக்கைகள் எடுத்தால் மட்டுமே இந்தியாவின் கடல் மீன் வளம் காக்கப்படும் என்று கூறினர். மேலும் சுய மான கட்டுப்பாட்டுடன் செயல்பட்டு அதிக அளவில் மீன்பிடித்தல்



கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள்

மற்றும் குஞ்சு மீன் இனத்தைப் பிடித்தல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று கருத்து தெரிவித்தனர்.

எம்.எஸ்.சி.யின் உலக அபிவிருத்தித் திட்டங்களின் தலைவர் முனைவர். யெமி ஓலோருண்டுயி பேசும் போது சுயமாக வகுத்துக் கொண்ட வழிமுறைகளால் மட்டுமே நிலையான மீன் வளத்தைக் கட்டிக்காக்க இயலும் என்றும் இதுவே காலத்தின் தேவை என்றும் கூறினார்.

மேலும் அவர் கூறும் போது நிலையான மீன்வளத்தை நிர்வகிப்பது என்பது மிகவும் முக்கியமானது என்றும் இதனால் மட்டுமே உலகச் சந்தையில் சுமுகமான வர்த்தகத்தை தொடரமுடியும் என்றார். இன்றைய காலகட்டத்தில் விதிமுறைகளைப் பின்பற்றாத கடல் உணவுப் பொருட்களை விற்பனை செய்வது இயலாத காரியம் என்றும் கூறினார். சிறந்த முறையில் நிர்வகிக்கப்படும் மீன் வளத் திற்கு சிறப்பான அனுகூலங்கள் இருக்கிறது. எகோ – லேபலிங் என்பதே பொதுமக்களுக்கு கடல் உணவுப் பொருட்களிலிருந்து பாதுகாப்பு தருவதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். இந்த முறையால் சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படும், மீன் பிடிக்கும் முறை ஒழுங்குபடுத்தப்படும், மீன் வளம் பெருகும் என்பதாகும் என்று முனைவர் யெமி கூறினார்.

எம்.எஸ்.சி சான்று பற்றி பேசும் போது முனைவர். சுனில் முகமது, முதன்மை விஞ்ஞானி, சி.எம்.எஃப்.ஆர்.ஐ. இந்த சான்று கிடைப்பதால் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதுடன், இந்திய மீன் வர்த்தகத்தில் ஒருங்கிணைப்பு கிடைப்பதுடன் இந்திய மீன் வளத்துறைக்கு சர்வதேச அளவில் தரமான மீன் உற்பத்தி என்ற அங்கீகாரமும் ஏற்படும் என்று கூறினார்.

மேலும் அவர் கூறும் போது இந்த சான்றிதழ் மூலமாக இந்திய கடல் உணவு ஏற்றுமதி வர்த்தகத்தில் நான்கு சதவீத வளர்ச்சி ஏற்படும். இதனால் இந்திய பொருட்களுக்கு ஐரோப்பிய மற்றும் வட அமெரிக்க நாடுகளில் வர்த்தக மேம்பாடு ஏற்படும் என்றார். இதுவரை 36 நாடுகளுக்கு 338 எம்.எஸ்.சி. சான்று கிடைத்துள்ள நிலையில் இந்தியாவிற்கு இதுவரை ஒரே ஒரு சான்று மட்டுமே கிடைத்துள்ளது, என்றார்.

## நிலையான கடலுணவு நெட்வொர்க் துவக்கம்

நிலையான கடலுணவு நெட்வொர்க் திட்டம் 12 உறுப்பினர்களைக் கொண்டு துவங்கப்பட்டது. சி.எம்.எஃப்.ஆர்.ஐ, சி.ஐ.எஃப்.டி., எம்.பி.இ.டி.எ., கடல் உணவு வர்த்தகம், சில்லறை விற்பனையாளர்கள், கலம் இயக்குபவர்கள், பாரம்பரியமான மீனவர்கள், மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியோர் இணைந்து மீன் வளம் காக்கவும், ஒழுங்கான விதிமுறைகளைப் பின்பற்றி நிலையான மீன்பிடித் தொழிலை நீடித்து செய்யவும் வழிவகுக்கும் இந்த திட்டத்தைத் துவங்கியுள்ளனர். இதன் தலைவர் முனைவர் சுனில் முகமது ஆவார். முனைவர்.எ.கோபாலகிருஷ்ணன், இயக்குநர், சி.எம்.எஃப்.ஆர்.ஐ. இந்த கலந்துரையாடலின் தலைவராக இருந்தார். இந்த குழு உறுப்பினர்களாக முனைவர். ராம் மோகன், எம்.கே. இணை இயக்குநர் (சந்தை) எம்.பி.இ.டி.எ. மற்றும் முனைவர். கே.கே.அப்புக்குட்டன், முதன்மை விஞ்ஞானி (ஓய்வு) சி.எம்.எஃப்.ஆர்.ஐ ஆகியோராவர்.

# ஒடிசாவில் இறால் மற்றும் நீர் உயிரின வளர்ப்பு பயிற்சி முகாம்




*திரு.யு.சி. மொகப்பத்ரா, துணை இயக்குநர், எம்.பி.இ.டி.எ. மண்டலப் பிரிவு, புவனேஷ்வர், மற்றும் திரு.சிதாநாத் பெகரா, கூடுதல் உதவி மீன்வள அதிகாரி, மீன்வளத் துறை, கேந்திரப்பாரா மாவட்டம், ஆகியோர் பயிற்சியின் போது மேடையில் இருக்கும் காட்சி*

ஒடிசாவிலுள்ள கேந்திரப்பாரா மாவட்டத்தில் அஜகார்பதியா எனும் கிராமத்தில் இறால் வளர்ப்பு அதிக அளவில் நடந்து வருகிறது. அங்குள்ள விவசாயிகள் இறால் மற்றும் நண்டு வளர்ப்பதிலுள்ள நவீன தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ள விரும்பினர். எனவே நிலையான மற்றும் தரமான மீன் ஊற்பத்தித் திட்டத் தின் பாகமாக எம்.பி.இ.டி.எ.வின் புவனேஷ்வரிலுள்ள மண்டலப் பிரிவு அலுவலகம் மூன்று நாட்கள் பயிற்சி வகுப்பிற்கு ஏற்பாடு செய்திருந்தது. மார்ச், 8-10, 2018 தேதிகளில் நடைபெற்ற இந்த பயிற்சியில் இறால் வளர்ப்பில் நல்ல மேலாண்மை முறைகளைப் பின்பற்றுதல் மற்றும் பலதரப்பட்ட இனங்களை அறிந்து கொள்ளும் வகையில் வகுப்புகள் நடத்தப்பட்டன.

திரு.யு.சி.மொகப்பத்ரா, துணை இயக்குநர், எம்.பி.இ.டி.எ. இந்த பயிற்சி இப்பகுதி விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும், ஏனென்றால் இவர்கள் வண்ணமி இறால் குஞ்சுகளை இருப்பு செய்து பண்ணை நடத்துபவர்கள் என்று கூறினார். விவசாயிகள் இந்த பயிற்சியின் மூலமாக புதுவிதமான தொழில்நுட்பங்களைக் தெரிந்து கொண்டு ஏற்றுமதி தரமிக்க இறால் உற்பத்தியைத் தொடரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். பயிற்சி தொடங்கும் முன்பே வருகை தந்த விவசாயிகளின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டு, இறால் வளர்ப்பு தொடர்பான நவீன தொழில்நுட்பங்கள் அடங்கிய கையேடு, இறால் வளர்ப்பில் பி.எம்.பி. நீர் உயிரின வளர்ப்பில் ஆன்டிபயாடிக்சை தவறான முறையில் பயன்படுத்துவதைத் தடுக்கும் விதத்திலான குறிப்புகள் அடங்கிய புத்தகம் ஆகிய பயனுள்ள தகவல் குறிப்புகள் வழங்கப்பட்டன. திரு.மொகப்பத்ரா ஒடிசாவில் நீர் உயிரின வளர்ப்பின் தற்போதைய நிலையை எடுத்துக் கூறி ஏற்றுமதித் தரமிக்க உற்பத்தி தொடர்வதால் இந்த மாநிலத்தின் ஏற்றுமதி வர்த்தகம் அதிகரிக்கும் நிலை ஆகியவற்றை எடுத்துக் கூறினார். மேலும் இவர் பி.எம்.பி. மற்றும் இதர தொழில் நுட்ப முறைகள், மீன்களை சேகரிக்கும் முறை ஆகியவற்றைக் கூறி இது போன்ற விஞ்ஞானப்பூர்வமான செயல் முறைகளைப் பின்பற்றுவதால் பொருளாதார வளர்ச்சி போன்றவற்றை விளக்கினார். எம்.பி.இ.டி.எ. வழங்கும் நிதி உதவித் திட்டங்கள், மற்றுமுள்ள திட்டங்களைப் பற்றி உள்ளூர் மொழியில் பேசினார்.

அடுத்ததாக திரு.சித்தாநாத் பெகரா, கூடுதல் உதவி மீன்வள அதிகாரி, மீன்வளத்துறை, கேந்திரப்பாரா மாவட்டம் பேசும்போது சி.எ.எ. சான்று பெறும் முறை மற்றும் பதிவு செய்தல், மாநில மீன்வளத்துறையின் திட்டங்கள் ஆகியவற்றை எடுத்துக் கூறினார்.

இரண்டாம் நாள் திரு.எஸ்.துர்கா ராவ், பீல்டு சூப்ரவைசர்,




***சந்தானு சாகூ, இளநிலை டெக்னிக்கல் மீன்வள உதவியாளர், மீன்வளத்துறை, கேந்திரப்பாரா மாவட்டம், பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் காட்சி***

இறாலின் குணாதிசயங்கள், தரமான குஞ்சுகளைத் தேர்வு செய்யும் முறை, டிரான்ஸ்போர்டேசன், குஞ்சுகளை வளர்ப்பதற்கு முன்பாக அவற்றை தயார் செய்வது, குளம் தயாரிப்பது, மண் மற்றும் தண்ணீரின் தரத்தை நிர்வகிப்பது, மீன்களுக்கு தீனி தருவது, நோய்தடுப்பு முறைகள், மற்றும் தடை செய்யப்பட்ட ஆன்டிபயாடிக்ஸ்களைத் தவிர்த்தல், மருத்துகளப் பயன்படுத்துவது, இறால் பண்ணையின் பொருளாதாரம், மற்றும் நீர் உயிரின வளர்ப்பில் ஜி.பி.எஸ். ஆகியவை குறித்து விளக்கம் கூறினார். களி நண்டு, கொடுவா மற்றும் திலோப்பியா வளர்த்தல் போன்றவற்றையும் விளக்கினார். மேலும் இவற்றை வளர்க்கும் முறைகளை விளக்கும் வீடியோவும் விவசாயிகளுக்கு காண்பிக்கப்பட்டது.

மூன்றாம் நாளில் திரு. சந்தானு சாகூ, இளநிலை டெக்னிக்கல் மீன்வள உதவியாளர், மீன்வளத்துறை, கேந்திரப் பாரா மாவட்டம், இறால் வளர்ப்பில் சிறந்த நிர்வாக முறைகளை வகைப்படுத்திக் கூறினார். இதனைத் தொடர்ந்து பேசிய எம்.பி.இ.டி.வின். உதவி இயக்குநர் இடத்தேர்வு, இறால் குளங்களை நிர்மா ணித்தல், இறால் வளர்ப்பின் பொருளாதார முறைகள், மீன்வளர்ப்பு தொடர்பாக எம்.பி.இ.டி.எ.வில் பதிவு செய்து கொள்ளும் முறை, போன்றவற்றை விளக்கினார். மேலும் எம்.பி.இ.டி.எ. புதிதாகத் துவங்கியுள்ள ஃபிஷ் எக்சேஞ் போர்டல் குறித்தும் அதனால் ஏற்படும் பயங்களும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

நிறைவு நாளின் போது பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் உதவித் தொகை வழங்கப்பட்டது. விவசாயிகளின் சார்பாக திரு.சுர்பேஷ்வர் பால் மற்றும் திரு.பலராம் பால் ஆகியோர் பேசினர். சக விவசாயிகள் அனைவரும் விஞ்ஞான முறையிலான இறால் வளர்ப்பில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். இருபது விவசாயிகள் இந்த பயிற்சியில் கலந்து கொண்டு, பயனுள்ள தகவல்களை தெரிந்து கொண்டோம் என்றும் இது போன்ற நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து தந்த எம்.பி.இ.டி.எ. மற்றும் மாநில மீன்வளத் துறைக்கு நன்றி கூறினர்.



# கான்சாரில் இறால் மற்றும் நீர் உயிரின வளர்ப்பு பயிற்சி முகாம்




ஒடிசாவில் கேந்திரப்பாரா மாவட்டத்தில் மகாகாலபாரா பிளாக்கிலுள்ள கான்சார் கிராமத்தில் பல விவசாயிகள் டைகர் இறால் வளர்ப்பில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் இறால் வளர்ப்பில் நவீனமான தொழில் நுட்பங்களைத் தெரிந்து கொள்ளும் ஆவலில் இருந்தனர். எனவே எம்.பி.இ.டி.எ.வின் புவனேஷ்வரிலுள்ள மண்டலப் பிரிவு அலுவலகம் மூன்று நாட்களுக்கான பயிற்சி முகாம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்தது. மார்ச்,2018 14 முதல் 16 வரை நடைபெற்ற பயிற்சி முகாமில் இந்த மாவட்டத்தில் நிலையானதும் தரமானதுமான நீர் உயிரின வளர்ப்பை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த பயிற்சி நடத்தப்பட்டது.

திரு.நடேஷ் விஷ்ணு தம்பாடா, உதவி இயக்குநர், எம்.பி.இ.டி.எ. இந்த பயிற்சி முகாமைத் துவக்கி வைத்தார். அவர் தமது உரையின் போது ஒடிசாவின் தற்போதைய நீர் உயிரின வளர்ப்பின் நிலையை எடுத்துக் கூறினார். மேலும், தரமான உற்பத்தியால் இந்த மாநிலத்தின் ஏற்றுமதித் தொழில் எந்த அளவிற்கு மேன்மை யடையும் என்றும் கூறினார். இறால் வளர்ப்பதர்கான இடத்தேர்வு செய்யும் முறை, பி.எச்.டி பதிவு, பி.எம்.பி. மற்றுமுள்ள தொழில்நுட்ப தகவல்களை எடுத்துக் கூறினார்.

திரு.என்.வி.தம்பாடா எம்.பி.இ.டி.எ. வழங்கிவரும் நிதி உதவி மற்றும் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள ஃபிஷ் எக்ஸ்சேஞ்ச் போர்ட்டல் மற்றும் பல விவசாயிகளுக்குப் பயனுள்ள தகவல்களை எடுத்துக் கூறினார். இவரது உரையை திரு. சுரேஷ் மொகான்டி உள்ளூர் மொழியில் மொழிபெயர்த்துக் கூறினார். மேலும் அவர் இறால் வளர்ப்பதிலுள்ள பொருளாதாரம், அகுவா சொசைட்டி அமை க்கும் முறை மற்றும் இதனால் ஏற்படும் பயன்கள் பற்றி கூறினார்.

பயிற்சி தொடங்கும் முன்பே வருகை தந்த விவசாயிகளின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டு, இறால் வளர்ப்பு தொடர்பான நவீன தொழில்நுட்பங்கள் அடங்கிய கையேடு, இறால் வளர்ப்பில் பி.எம்.பி. நீர் உயிரின வளர்ப்பில் ஆன்டிபயாடிக்சை தவறான முறையில் பயன்படுத்துவதைத் தடுக்கும் விதத்திலான குறிப்புகள் அடங்கிய புத்தகம் ஆகிய பயனுள்ள தகவல் குறிப்புகள் வழங்கப்பட்டன.

இரண்டாம் நாளில் திரு. சந்தானு சாகூ, இளநிலை டெக்னிக்கல் மீன்வள உதவியாளர், மீன்வளத்துறை, கேந்திரப்பாரா மாவட்டம், இறாலின் குணாதிசயங்கள், தரமான குஞ்சுகளைத் தேர்வு செய்யும் முறை, டிரான்ஸ்போர்டேசன், குஞ்சுகளை வளர்ப்பதற்கு முன்பாக அவற்றை தயார் செய்வது, குளம் தயாரிப்பது, மண் மற்றும் தண்ணீரின் தரத்தை நிர்வகிப்பது, மீன்களுக்கு தீனி தருவது, நோய்தடுப்பு முறைகள், மற்றும் தடை செய்யப்பட்ட ஆன்டிபயாடிக்ஸ்களைத் தவிர்த்தல், மருத்துகளப் பயன்படுத்துவது, இறால் பண்ணையின் பொருளாதாரம், மற்றும் நீர் உயிரின வளர்ப்பில் ஜி.பி.எஸ். ஆகியவை குறித்து விளக்கம் கூறினார். களி நண்டு, கொடுவா மற்றும் திலோப்பியா வளர்த்தல் போன்றவற்றையும் விளக்கினார்.



நிறைவு நாளில் திரு.சரத் குமார் ஜெனா, முதுநிலை மீன்வளத் தொழில்நுட்ப உதவியாளர், மீன்வளத்துறை, கேந்திரப்பாரா வகுப்பெடுத்தார். அவர் சி.எ.எ. சான்று பெறும் முறை மற்றும் பதிவு செய்தல், மாநில மீன்வளத்துறையின் திட்டங்கள் மற்றும் இறால் வளர்ப்பிலுள்ள சிறந்த முறைகளை எடுத்துக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து உதவி இயக்குநர், எம்.பி.இ.டி.எ. பேசும் போது எலிசா ஆய்வகம், பி.எச்.டி சாம்பிள் டெஸ்டின் முக்கியத்துவம், என்.ஆர்.சி.பி. சாம்பிள் சோதனை ஆகியவை குறித்து எடுத்துக் கூறினார். புவனேஷ்வரில் ஒரு தரப்பரிசோதனை ஆய்வகம் ஒன்று தொடங்க உள்ளது என்றும் கூறினார்.

பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் உதவித் தொகை வழங்கப்பட்டது. விவசாயிகளின் சார்பாக திரு.அபிமன்யு ரோட் மற்றும் திரு.நிதிராம் பசாண்டியா ஆகியோர் பேசினர். சக விவசாயிகள் அனைவரும் விஞ்ஞான முறையிலான இறால் வளர்ப்பில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். இருபது விவசாயிகள் இந்த பயிற்சியில் கலந்து கொண்டு, பயனுள்ள தகவல் களை தெரிந்து கொண்டோம் என்றும் இது போன்ற நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து தந்த எம்.பி.இ.டி.எ. விற்க்கு நன்றி கூறினர்

# பல்வகைப்படுத்துதல்: விழிப்புணர்ச்சி முகாம்



*அல்வெக்குடி கிராமத்தில் நடைபெற்ற முகாம்*

கார்வாரிலுள்ள எம்.பி.இ.டி.எ.வின் துணை மண்டலப் பிரிவு அலுவலகம் நீர் உயிரின வளர்ப்பில் பல்வகைப்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு முகாம் ஒன்றை கொனாவார், கும்தா, மற்றும் கார்வார் ஆகிய கிராமங்களில் நடத்தியது. இது அந்த கிராமங் களில் வாழும் மீன் / இறால் வளர்க்கும் விவசாயிகளுக்கும், இந்த தொழிலில் ஈடுபடவிருக்கும் புதியவர்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திரு.விஜயகுமார் யாராகல், துணை இயக்குநர், மற்றும் திரு.சேசெந்திரா எம் சிரோத்கார் இளநிலை தொழில்நுட்ப அலுவலர், எம்.பி.இ.டி.எ. ஆகியோர் பல்வகைப்படுத்துதல் குறித்து விவரித்தனர். திலோப்பியா, கொடுவா மற்றும் மாங்குரோவ் நண்டு



ஹால்திபூரில் நடைபெற்ற முகாம்



பைத்தாகோல் கிராமத்தில் நடைபெற்ற முகாம்



கோடிபாக் கிராமத்தில் நடைபெற்ற முகாம்

வளர்த்தல் ஆகியவை குறித்து விளக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் சுமார் 90 பேர் கலந்து கொண்டனர். மேலும் இது போன்ற ஒரு முகாம் பெண்களுக்கு மட்டும் மார்ச் 8 மகளிர் தினத்தன்று உத்தரகனடாவிலுள்ள கார்வாரில் சயின்ஸ் சென்டரில் நடத்தப்பட்டது. இதில் 32 பெண்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியின்போது கலந்து கொண்டவர்களுக்குத் தேவையான செய்முறை விளக்கக் கையேடுகள் வழங்கப்பட்டன.

# நெல்லூர் எம்.பி.இ.டி.எ. சேட்டலைட் சென்டரில் விவசாயிகள் கூட்டம்



*பேராசிரியை (முனைவர்) டி.நீரஜா, அசோசியேட் பேராசிரியர், விவசாயிகள் கூட்டத்தை குத்திவிளக்கேற்றி துவக்கி வைக்கின்றார்*

எம்.பி.இ.டி.எ. சேட்டலைட் சென்டர், நெல்லூர் மார்ச் 23ல் விவசாயிகள் கூட்டம் ஒன்றை இந்துகூர்பெட் மண்டலில் குடுதிப்பாலம் சிவன் கோவில் ஆடிட்டோரியத்தில் நடத்தியது. இந்த கூட்டத்தில் நீர் உயிரின வளர்ப்பில் பிரச்சனைகளும் சவால்களும் என்ற தலைப்பில் விவாதிக்கப்பட்டது. இதன் நோக்கம் நமது நாட்டில் தரமான நீடித்து இருக்கும் விதத்திலான இறால் வளர்ப்பு நடைபெற வேண்டும் என்பதாகும். இதில் சுமார் 145 முன்னணி விவசாயிகள் கலந்து கொண்டனர்.



*நிகழ்ச்சியில் பங்கேற்ற பார்வையாளர்கள்*

இந்த நிகழ்ச்சியை பேராசிரியை (முனைவர்) டி.நீரஜா, அசோசியேட் பேராசிரியர், அகுவாடிக் அனிமல் ஹெல்த் நிர்வாகத்துறை, மீன்வளக் கல்லூரி,முதுக்கூர் துவக்கி வைத்தார். தனது துவக்கவுரையில் எம்.பி.இ.டி.எ. நாட்டில் தரமான மீன் உற்பத்தி தொடர்ந்து நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தில் ஏற்பாடு செய்து வரும் முயற்சிகளைப் பாராட்டினார். இது போன்ற தீவிரமான முயற்சிகளால்தான் உலகச் சந்தையில்

இந்திய இறால்களுக்கு மிகுந்த வரவேற்பு இருந்து வருவதை எடுத்துக் கூறினார்.

திரு.பிரமேஷ்வர ராவ், உதவி இயக்குநர், மண்டலப் பிரிவு, விஜயவாடா கூட்டத்தினரை வரவேற்றார். முனைவர்.அமரேனி ரவி குமார், அல்பா பயாலஜிகல்ஸ், நெல்லூர் தமது வாழ்த்துரையில் எம்.பி.இ.டி.எ. துவக்கியிருக்கும் ஃபிஷ் எக்சேஞ்ச் போர்டலின் பயன்பாட்டை விளக்கிக் கூறி, இது விவசாயிகளுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்று கூறினார். விவசாயிகள் விலையில் அடிக்கடி ஏற்ற இறக்கம் ஏற்படும் குறையை அடிக்கடி வெளிப்படுத்துகின்றனர் என்றும் அதி கமான உற்பத்திச் செலவால் இறால் உற்பத்தியில் விவசாயிகளுக்கு ஆர்வம் குறைந்துள்ளது என்றும் கூறினார்.

முனைவர்.அமரேனி ரவி குமார் பேசும் போது ஆந்திரப் பிரதேசத்தில் மீன் வளர்ப்பில் இருந்துவரும் பிரச்சனைகள் சவால்களின் உண்மையான நிலையை எடுத்துக் கூறினார். இறால் உற்பத்திக்குத் தேவையான உயிரியல், இயற்பியல், மற்றும் இரசாயன காரணிகள் இருந்தால் மட்டுமே வெற்றிகரமான இறால் உற்பத் தியை செய்ய முடியும் என்று கூறினார். மேலும் விவசாயிகளுக்கு எச்சரிக்கையாக இறால் வளர்ப்பில் தரமான தண்ணீர் என்பது அதன் தரத்தை நிர்ணயிப்பதில் முக்கிய பங்குவகிக்கும் என்று கூறினார்.



*முனைவர்.அமரேனி ரவி குமார் மீன் வளர்ப்பில் இருந்துவரும் பிரச்சனைகள் சவால்களின் உண்மையான நிலையை எடுத்துக் கூறினார்*



*பேராசிரியை (முனைவர்) டி.நீரஜா, அசோசியேட் பேராசிரியர், விவசாயிகள் கூட்டத்தில் உரையாற்றும் காட்சி*

பேராசிரியை (முனைவர்) டி.நீரஜா நீர் உயிரின வளர்ப்பில் நோய் நிர்வாகம் மற்றும் பயோ செக்குரிட்டி என்பது பற்றி பேசினார். இறால் வளர்ப்பில் பயோ செக்யூரிட்டி என்பது மிகவும் முக்கிய மானது என்றும் இதனை அனைத்து இறால் பண்ணைகளிலும் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும் இறால் வளர்ப்பின் போது இந்த பயோ செக்யூரிட்டியை கடைப்பிடிக்க வேண்டிவரும் நிலைகளை விளக்கினார். இறால் குஞ்சுகளை வளர்க்கத் தொடங்கும் முன்பு அவற்றை ஆய்வகங்களில் சோதனை செய்து கொள்வது அவசியம் என்று கூறினார்.

திரு.பிரமேஷ்வர ராவ், உதவி இயக்குநர், மண்டலப் பிரிவு, விஜயவாடா, ஃபிஷ் எக்சேஞ்ச் போர்ட்டலின் அவசியத்தை கூட்டத் தினருக்கு விளக்கினார். விவசாயிகள் இதனை தவறாது பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். எம்.பி.இ.டி.எ. தரமான இறால் வளர்ப்பிற்காக மேற்கொண்டு வரும் முயற்சிகளை எடுத்துக் கூறினார். எம்.பி.இ.டி.எ.வின் எலிசா ஆய்வகங்களைப் விவசாயிகள் பயன்படுத்தி ஆன்டிப்யாடிக் மற்றும் இரசாயனக் கலப்பற்ற இறால்களை ஏற்றுமதிக்கு அனுப்ப வேண்டும் என்று கூறினார். தரமான உற்பத்தியில் ஈடுபட்டு வருபவர்களுக்கு மட்டுமே எப்போதும் முதலிடமும் வரவேற்பும் இருக்கும் என்று கூறினார்.

முனைவர்.கணேஷ் கே. உதவி இயக்குநர், எம்.பி.இ.டி.எ. நன்றி கூறினார்.

# கர்நாடக விவசாயிகள் ஆந்திரப்பிரதேசத்திற்கு கற்றறிதல் பயணம்




*பயணக்குழுவினர் மணிகொண்டாவில் திலோபியா புரூட் ஸ்டாக் அபிவிருத்தி திட்டம் மற்றும் ஆல் மேல் ஸ்கேம்பி திட்டத்தை பார்வையிடும் காட்சி*

எம்.பி.இ.டி.எ.கர்நாடகத்தில் கார்வாரிலுள்ள மண்டலப் பிரிவு அலுவலகம் பெல்காம் மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட பத்து விவசாயிகளை மாநிலங்கிடையேயான கற்றறிதல் பயணத்திற்கு அழைத்துச் சென்றது. இந்த பகுதி மக்களின் வேண்டுகோளிற்கேற்ப சிக்கோடி மீன்வளத் துறையின் உதவி இயக்குநர் திரு.சஞ்சீவ் அர்கரே இந்தப் பயணத்திற்கு பத்து விவசாயிகளைத் தேர்வு செய்து மார்ச் 14 முதல் 19 வரை இந்த பயணத்தை மேற்கொண்டனர்.

இந்தப் பயணத்தின் போது திரு.ஜி.ராமர் இளநிலை டெக்னிக்கல் அதிகாரி, எம்.பி.இ.டி.எ. உடனிருந்தார். இந்தக் குழு ஹுப்ளியிலிருந்து மார்ச் 14ல் விஜயவாடாவிற்குச் சென்றது. திரு.சத்யநாராயணா இந்தப் பயணக்குழுவிற்கு வழிகாட்டியாக இருந்தார்.

**பயணவிபரம்**

### வெங்கட் அகுவா ஹேச்சரி (பி) லிட் கன்கிபாடு, கிருஷ்ணா மாவட்டம்

மார்ச் 15ல் இந்தகுழு வெங்கட் அகுவா ஹேச்சரியை பார்வையிடச் சென்றது. இங்கு மசிலிபட்டினம் போன்ற கடற்கரைப் பகுதிகளிலிருந்து கடல் நீரைக் கொண்டு வந்து L.vannamei குஞ்சுகளை உற்பத்தி செய்கின்றனர். இந்தப் பண்ணையின் மேலாளர் திரு.பிரசாத ராஜு இந்த பண்ணையின் செயல்பாடுகளையும் விற்பனை செய்யும் விதத்தையும் எடுத்துக் கூறினார். கடல் நீரை சேமிக்கும் இடம், செடிமெண்ட் டேங், செட்டில்மெண்ட் டேங், தண்ணீரைச் சுத்தம் செய்யும் இடம், ஆகிய இடங்களைப் பார்வையிட்டனர். ஆரம்பத்தில் அதாவது 2000 முதல் 2008 வரை அதிகமான தேவை இருந்ததால் Scampi குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் பின் L.vannamei உற்பத்திக்கு மாறிவிட்டதாகவும் கூறப்பட்டது. L.vannamei குஞ்சுகள் சுத்த நீர் பகுதிகளுக்கு இருப்பு செய்ய வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிந்து கொண்டனர்.

### திலோப்பியா புரூட் ஸ்டாக் அபிவிருத்தி திட்டம் மணிகொண்டா, கிருஷ்ணா மாவட்டம்

திரு.அப்பாலா நாயுடு உதவி திட்ட மேலாளர் மற்றும் திரு.ஸ்ரீனிவாஸ், உதவி டெக்னிக்கல் மேலாளர் ஆகியோர் திலோப்பியா அபிவிருத்தித் திட்டம் பற்றி விவரித்தனர். பயணக் குழுவினர் எழுப்பிய சந்தேகங்களுக்கு உரிய பதிலைக் கூறினர். பண்ணையின் பல்வேறு பாகங்களையும் செயல்பாடுகளையும் பார்வையிட்டனர்.

## வெங்கடேஷ்வரா ராவ் ஃபார்ம்ஸ் & போது ராஜ் கோல் கொண்டா, குடிவாடா , கிருஷ்ணா மாவட்டம்

இந்தப் பயணக் குழுவினர் கோல்கொண்டா கிராமத்தில் திரு.சதீஷ் மற்றும் திரு.போது ராஜ் ஆகியோரைச் சந்தித்தனர். திரு.சதீஷ் பங்களாதேசத்திலிருந்தும் கொல்கத்தாவிலிருந்தும் தருவிக்கப்பட்ட குஞ்சுகளைப் பெருக்கம் செய்யும் விதம் பற்றி விளக்கினர். மூன்று ஏக்கர் பரப்பில் உருவாக்கப்பட்ட குளத்தில் அவற்றைவிட்டு, உள்ளூரில் தயாரிக்கப்படும் பெல்லட் ஃபிஷ் தீனியைக் கொடுத்து வளர்க்கும் விதத்தைக் கூறினர். இந்த குஞ்சுகள் ஒன்பது மாதகாலத்தில் 125 கிராம் எடை அளவிற்கு வளர்ந்து விடும் என்று சுரேஷ் கூறினார். இதன் தனியான சுவை காரணமாக உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் இந்த மீன் விரும்பி மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்றார்.

திரு.போதுராஜ் பண்ணையில் Rogua மீன் ஒரு ஏக்கர் பரப்பில் வளர்க்கப்படுகிறது. இது 200 முதல் 250 கிராம் வரை வளரும் தன்மை கொண்டது. இதற்கு உணவாக 73:20:5:2 என்ற விகிதத்தில் நெல் தவிடு, கடலைப் பிண்ணாக்கு, பருத்தி விதை பிண்ணாக்கு, மற்றும் மினரல்கள் கலந்த கலவை தீவனமாகத் தரப்படுகிறது. ஒன்பது மாதத்தில் இவரது மீன் 1.5 முதல் 2 கிலோ வரை எடையுள்ளதாக வளர்ந்து விடும் என்று கூறினார். மேலும் இவர் குஞ்சுப் பண்ணை ஒன்றையும் நிர்வகித்து வருகிறார். இரண்டு மாதக் குஞ்சுகளின் எடை 150 முதல் 200 கிராம் வரை எடையுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஸ்ரீனிவாசராவ் ஃபிஷ் ஃபார்ம்ஸ், கொண்டகி காளிடிண்டி மண்டல், கிருஷ்ணா மாவட்டம்

அடுத்த நாள் இந்த பயணக்குழு விஜயவாடாவிலிருந்து 85 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திரு.ஸ்ரீனிவாசா ராவின் பண்ணையைக் காணச் சென்றனர். இங்கு வளர்க்கப்படும் மீனின் எடை இரண்டு முதல் மூன்று கிலோ வரை இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. பண்ணையின் செயல்பாடுகள் விவரித்துக் கூறப்பட்டது. மேலும் இந்த குழுவினர் திரு.கே.ரமேஷ் பாபுவின் பண்ணை மற்றும் கொடுவா பண்ணையை மாட்டகுண்டா கிராமத்தில் பார்வையிட்டனர்.

## சிவாஜி ராவ் பண்ணை மற்றும் திரு.சிரஞ்சீவி பண்ணை, பெத்த பட்டணம், பந்தர் மண்டல், கிருஷ்ணா மாவட்டம்

மார்ச் 17ல் இந்தக் குழு பெத்தபட்டனம் கிராமத்திலுள்ள திரு.சிவாஜி ராவின் பண்ணையைப் பார்வையிடச் சென்றனர். இங்கு L.vennamei குஞ்சுகள் 15 Doc என்ற அளவில் உள்ளன. இந்த பண்ணை மிகவும் பாதுகாப்பான முறையில் வடிவமைக் கப்பட்டுள்ளது. பறவைகள் மற்றும் நண்டுகள் நுழைந்து விடாமல் இருக்க வலையிட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. பண்ணையின் உள்ளே நுழையும்போது கால்களைக் கழுவிசுத்தம் செய்து கொள்ளும் முறை இங்கு பழக்கத்தில் உள்ளது. மேலும் இதன் உரிமையாளர் கூறும் போது ஸி.ஸளஜஐழிதுளஷ் மீனை அறுவடை செய்யும் வரையில் ஒரு மீனிற்கு ரூ.ஐந்து வீதம் செலவாகிறது என்ற விவரத்தைக் கூறினார். இந்த பண்ணையைச் பூச்சிக் கிருமிகளிடமிருந்து காப்பதற்காக நுவாக்ரானும் தண்ணீரைப் பாதுகாக்க பிளீச்சிங் பவுடரும் பயன்படுத்தப்படுவதாகவும், இவற்றைப் பயன்படுத்திய 10 முதல் 15 நாட்கள் இடைவெளியில் மட்டுமே மீன் வளர்த்தல் தொடர்பான செயல்பாடுகள் நடைபெறும் என்றும் கூறினார்.

## எம்.பி.இ.டி.எ. எலிசா ஆய்வகம், மீன் சந்தை மற்றும் பந்தர் ஃபோர்ட், மாசிலிபட்ணம்

ஆய்வகத்தை பார்வையிடச் சென்ற போது செல்வி.சுவாதி, ஆய்வகப் பொறுப்பாளர், ஆய்வகத்தின் செயல்முறைகளை விளக்கினார். இறால் மற்றும் மீன்களில் உள்ள அன்டிபயாடிக்ஸ் கூறுகளை கண்டறியும் விதம் பற்றி விளக்கினார். இந்த



*மணிகொண்டாவில் பயணக் குழுவினர் ஆர்.ஜி.சி.எ. அதிகாரிகளுடன் பேக்கேஜிங் மற்றும் குஞ்சு உற்பத்தி தொடர்பாக கலந்துரையாடும் காட்சி*

ஆய்வகத்தில் தடை செய்யப்பட்ட ஆன்டிபயாடிக்ஸ்களில் ஐந்தை மட்டுமே கண்டறிய இயலும் என்றும் இந்தியாவில் 20 குருப் ஆன்டிபயாடிக்ஸ்கள் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார். இங்குள்ள மீன் சந்தையைப் பார்வையிட்ட குழுவினர் பல ரகமீன்களையும் அவற்றின் விலை விவரங்களையும் கேட்டறிந்து கொண்டனர்.

## கேலக்சி ஃபீட்ஸ், குடிவாடா கிருஷ்ணா மாவட்டம்

பயணத்தின் நிறைவு நாளான மார்ச் 18ல் குழுவினர் கேலக்சி ஃபீட் பிளாண்டைப் பார்வையிட்டனர். அதன் உற்பத்தி மேலாளர் திரு.மாலிக் அங்கு உற்பத்தியாகும் பலவிதமான மீன் தீவனங்களையும் விளக்கிக் கூறினார்.

இந்தக் குழுவினர் விஜயவாடாவிலுள்ள பிரகாசம் பாரேஜைப் பார்வையிட்டனர். அங்கு கிருஷ்ணா நதியில் பிடிக்கப்பட்டு கரையேறிய சுத்த நீர் மீன்களைக் கண்டனர்.

# சிறந்த நிர்வாக முறைகள் மற்றும் நீர் உயிரின வளர்ப்பில் பல்வகைப்படுத்துதல் தொடர்பான பயிற்சி




*முனைவர் பி.ஸ்ரீனிவாசலு, உதவி இயக்குநர், எம்.பி.இ.டி.எ. பயிற்சியின் போது உரையாற்றுகின்றார்*

பீமாவரத்திலுள்ள எம்.பி.இ.டி.எ.வின் துணை மண்டலப் பிரிவு அலுவலகம் சிறந்த நிர்வாக முறைகள் மற்றும் நீருயிரின வளர்ப்பில் பல்வகைப்படுத்துதல் தொடர்பான மூன்று நாட்கள் பயிற்சி முகாம் ஒன்றை மார்ச் 7-9, 2018ல் ஏற்பாடு செய்திருந்தது. மேற்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள படுவா எனும் கிராமத்தில் இந்த பயிற்சி நடத்தப்பட்டது.

இந்த பயிற்சியின் முக்கிய நோக்கம் மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு சிறந்த நிர்வாக முறைகளையும், இதில் பல்வகைப்படுத்தும் முறைகளையும் கற்றுத் தருவதாகும். இதில் சுமார் 18 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

முனைவர் பி.ஸ்ரீனிவாசலு, உதவி இயக்குநர், எம்.பி.இ.டி.எ. பேசும் போது மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்காக எம்.பி.இ.டி.எ.மேற்கொண்டு வரும் திட்டங்களை எடுத்துக் கூறி, குளங்களை நிர்வகிக்கும் முறைகளைப் பற்றியும், பண்ணைகளைப் பதிவு செய்து கொள்ளும் முறைகள் பற்றியும் எடுத்துக் கூறினார். திரு.கே.ராமாஞ்சநேயலு, ஜூனியர் டெக்னிக்கல் ஆபீசர், எம்.பி.இ.டி.எ. நோய் நிர்வாகம் மற்றும் நீர் உயிரினவளர்ப்பில் பல்வகைப்படுத்தும் முறைகளைக் கூறினார். திரு.எல்.கே. பட்நாயக், ஃபீல்டு சூப்ரவைசர், எம்.பி.இ.டி.எ. சிறந்த குஞ்சுகளை வளர்ப்பதற்காகத் தேர்வு செய்யும் முறைகளைக் கூறினார். மேலும் மீன்களுக்கு தீனி கொடுக்கும் முறை, ஆன்டிபயாடிக் பிரச்சனைகள் ஆகியவற்றை விளக்கினார். திரு.ஸ்ரீனிவாஷ் ஃபீல்டு மேனேஜர், மேற்கு கோதாவரி மாவட்டம் அகுவா சொசைட்டியை அமைக்கும் விதம் மற்றும் அதன் பயன்களை எடுத்துக் கூறினார்.



***பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது***

நிறைவு நாளின் போது திருமதி.ராதா, பஞ்சாயத்து தலைவர், படுவா கிராமம் இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்து எம்.பி.இ.டி.எ. இது போன்ற பயிற்சி வகுப்புகளை ஏற்படுத்தித் தந்தமைக் காக நன்றி கூறினார். மேலும் பயிற்சியாளர்களிடம் இந்த பயிற்சியில் கற்றுக் கொண்டவற்றை நடைமுறையில் செயல்படுத்தி தரமான உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் உதவித் தொகை ஆகியவற்றை வழங்கினார். எம்.பி.டி.எ. அதிகாரிகளுடன் பயிற்சியாளர்கள் கலந்துரையாடல் நடத்தி தங்களது சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டனர்.

# நிலையான நீர் உயிரின வளர்ப்பு மற்றும் பல்வகைப்படுத்தல் கருத்தரங்கு




திரு.விஜயகுமார், துணை இயக்குநர், எம்.பி.இ.டி.எ. விவசாயிகள் மத்தியில் உரையாற்றுகின்றார்

கர்நாடகத்தில் உடுப்பி மாவட்டத்திலுள்ள குந்தாபூர் என்ற இடத்தில் நிலையான நீர் உயிரின வளர்ப்பில் பி.எம்.பி.யை சேர்த்தல் மற்றும் பல்வகைப்படுத்துவது தொடர்பான கருத்தரங்கு ஒன்று மார்ச் 20, 2018ல் நடைபெற்றது. திரு.விஜயகுமார் யராகல், துணை இயக்குநர், எம்.பி.இ.டி.எ. கூட்டத்தினரை வரவேற்று இந்த கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துக் கூறினார். முனைவர்.வி.கே. நாயக், கௌரவச் செயலாளர், உத்தர கன்னடா ஜில்லா விஞ்ஞான் கேந்திரம் இந்த நிகழ்ச்சியைத் துவக்கி வைத்து இது போன்ற பயனுள்ள கருத்தரங்கினை ஏற்பாடு செய்த எம்.பி.இ.டி.எ.வைப் பாராட்டினார். மேலும் அவர் உப்பு நீரில் இறால் வளர்ப்பதில் நவீன தொழில்நுட்பம் மற்றும் பலவகை மீன்களை வளர்க்கும் விதங்கள் பற்றி கூறினார்.

முனைவர் சந்திரகாந் லிங்காத், உதவி இயக்குநர், கடல் மீன் ஆராய்ச்சி மையம் மற்றும் பயிற்சி மையம், கர்நாடக கால் நடை மற்றும் மீன்வள சயின்ஸ் பல்கலைக் கழகம், பெலா நீர் உயிரின வளர்ப்பில் புதிய அணுகு முறைகள் மற்றும் குஞ்சு தேர்வு முதல் அறுவடை வரையான தொழில்நுட்பங்களை விவரித்துக் கூறினார். திரு.மஞ்சப்பா என். உதவிப் பேராசிரியர், ஹேசார்கட்டா, பெங்களூர், திருமதி.அஞ்சனா தேவி மற்றும் திரு.சந்திரசேகர், உதவி இயக்குநர்கள், மீன் வளத்துறை ஆகியோரும் இந்த கருத்தரங்கில் பங்கேற்று விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்தனர்.

திரு.விஜயகுமார், துணை இயக்குநர், l.vennamei மற்றும் பயோஃபுலோக் முறையில் சமீபத்திய தொழில் நுட்பம் குறித்து விளக்கம் தந்தார். இதிலுள்ள பலவகையான கையாளும் முறைகளை தெளிவாக விளக்கியவர், தடை செய்யப்பட்ட ஆன்டிபயாடிக்களை நீர் உயிரின வளர்ப்பில் பயன்படுத்தக் கூடாது என்று விவசாயிகளைக் கேட்டுக் கொண்டார்.

எம்.தம்மையா தேவதிகா, முன்னணி விவசாயி விவசாயிகள் சந்தித்து வரும் பிரச்சனைகளான நோய்களைத் தடுப்பது, கட்டுபடியாகாத விலை, தொழில் இழப்பு ஏற்படும் சமயங்களில் ஆயுட்காப்பீடு இல்லாத நிலை போன்றவற்றை எடுத்துக் கூறினார். இது தொடர்பாக எம்.பி.இ.டி.எ. தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு நிதி உதவி, வேளாண்துறைக்குள்ள மின்சாரக் கட்டணத்தை மீன் வளத்துறைக்கும் கொண்டுவருவது, கோஸ்டல் அகுவாகல்சர் லைசென்ஸ்களை துரிதமாக பெற்றுத் தருவது போன்ற முக்கியமான பிரச்சனைகளை விவசாயிகளின் நலன் கருதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

திரு. விஜயகுமார், துணை இயக்குநர், விவசாயிகளின் சந்தேகங்களைத் தீர்த்து வைத்தார். நிலையான மற்றும் தரமான மீன் உற்பத்திக்கான ஆலோசனைகளை வழங்குமாறு விவசாயிகளைக் கேட்டுக் கொண்டார்.

திரு.இப்ராஹிம் தமது தலைமை உரையின் போது மீன் வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்களது கடமை களை தவறாது செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். கடல் மீன் வகைகளில் மதிப்பு கூட்டிய பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்றார். பதப்படுத்தும் நிலையங்களில் எச்.சி.சி.எ.பி. யை அமுல்படுத்த வேண்டும் என்றார். சுமார் 55 விவசாயிகளும், மீன் தீவன டீலர்களும், மீன் வளர்ப்பு தொடர்பான கருவிகளை விநியோகம் செய்பவர்களும் மீன் வளத்துறை அதிகாரிகளும் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டனர். திரு.எஸ்.எம்.சிரோத்கர், ஜூனியர் டெக்னிக்கல் ஆபீசர், எம்.பி.இ.டி.எ. நன்றி கூறினார்.

# கடல் உணவு எச்.எ.சி.சி.பி பயிற்சி




*பயிற்சியில் பங்கேற்ற அலுவலகர்கள்*

எம்.பி.இ.டி.எ.வின் கொல்கத்தா மண்டலப்பிரிவு அலுவலகம் மார்ச் 20 முதல் 23 தேதிகளில் மேற்கு வங்கப்பகுதிகளில் கடல் உணவு பதப்படுத்தும் துறையில் ஈடுபட்டுள்ள தொழில்நுட்ப அலுவலகர்களுக்கு எச்.எ.சி.சி.பி, பயிற்சி திட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. திரு.ஜே.கே.ஐகட், இயக்குநர், உணவு பதப்படுத்தும் தொழில் மற்றும் தோட்டக்கலைத் துறை, மேற்கு வங்கம் இந்த நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார். திரு.ராஜரிசி பானர்ஜி, தலைவர், சீஃபுட் எக்ஸ்போர்ட்டர்ஸ் அசோசியேசன், மேற்கு வங்கப் பகுதி, மற்றும் திரு.தாஜ் முகமது, செயலர், ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் உரையாற்றினர். அனைவரும் கடல் உணவுத் துறையில் தரக் கட்டுப்பாடு தொடர்பாக பணியாற்றும் அனைவரும் கடல் உணவுப் பொருட்களின் ஏற்றுமதி வர்த்தகத்தில் நேரடியாகவே பணியாற்றுகின்றனர் என்பதே உண்மை என்றனர்.

எம்.பி.இ.டி.எ. இந்த நிகழ்வை 1996 முதல் நடத்தி வருகிறது. இது இந்த வரிசையில் 107வது நிகழ்ச்சியாகும். இதுவரை 2900ற்கும் அதிகமானோர் பயிற்சி பெற்றுள்ளனர். மேற்கு வங்கத்தில் மட்டும் இதுபோல் 13 பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சிக்கு 17 நிறுவனங்களில் இருந்து 26 பேர் பயிற்சியில் கலந்து கொண்டனர். பயிற்சி தருவதில் திரு.எஸ்.எஸ்.ஜி, துணை இயக்குநர் மற்றும் திரு.வி.வினோத், உதவி இயக்குநர் ஆகியோர் பங்கேற்றனர்.




*திரு.ராஜரிசி பானர்ஜி, தலைவர், சீஃபுட் எக்ஸ்போர்ட்டர்ஸ் அசோசியேசன், மேற்கு வங்கப் பகுதி, கூட்டத்தில் உரையாற்றும் காட்சி*




*திரு.ஜே.கே.ஐகட், பயிற்சியைத் துவக்கி வைக்கின்றார்*

# இந்திய இறால் ஏற்றுமதி அளவு அதிகரிப்பு

இந்தியா 2017-18 காலகட்டத்தின் முதல் 10 மாதங்களில் 5.64 பில்லியன் டாலர் மதிப்புள்ள கடல் உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. சென்ற ஆண்டைவிட இதன் வளர்ச்சி விகிதம் என்பது 13.27 சதவீதமாகும்.

இந்த ஏற்றுமதி அதிகரிப்பு என்பது இறால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இதர நாடுகளிலிருந்து அதிகப்படியான வரத்தும், தரக்கட்டுப்பாட்டு சோதனைகள் மிக அதிகமாக இருந்த நிலையில் என்பது கவனிக்கத்தக்கதாகும். ஜனவரி 2018 நிதியாண்டில் இந்தியாவின் ஏற்றுமதி 1,085,378 டன்களாகும். இது சென்ற 2017 நிதியாண்டு காலத்தில் 9,54,744 டன்களாக இருந்தது. ஏற்றுமதி அளவிலான வளர்ச்சி 13.68 சதவீதமாகும்.

இது குறித்து எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் மரு.எ.ஜெயத் திலக் கூறும் போது, இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதியின் அளவு கோடு உயர்ந்து கொண்டே இருக்கும் காலத்தில், உலக அளவில் இறாலின் விலையில் வீழ்ச்சியடைந்த நிலையிலும், இறால் உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து இறாலின் வரத்து மிக அதிக அளவிலும் இருந்தது. மேலும் ஐரோப்பிய யூனியன் உறை நிலையான இறால் மீன்களின் மீது ஆன்டிபயாடிக்சிற்கான தரச் சோதனை மிகக் கடுமையாக இருந்தது. மேலும் ஈகுடர் மற்றும் அர்ஜெண்டினா ஆகிய நாடுகளின் போட்டியையும் இந்தியா எதிர்கொண்ட நிலையில் இந்த ஏற்றுமதி உயர்வு நிலை நமக்குக் கிடைத்துள்ளது என்று கூறினார்.

மேலும் அவர் கூறும் போது,இந்தியாவின் தரமான உற்பத்தி காரணமாக இந்த ஏற்றுமதி உயர்வு என்பது மென்மேலும் உயர்ந்து கொண்டே இருக்கும். ஆர்கானிக் இறால் உற்பத்தி செய்யும் முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம். மேலும் நீர் உயிரின வளர்ப்பில் நூதன முறைகளைப் பின்பற்றவும் தரமற்ற பொருட்களை கண்டிப்பாகத் தடை செய்யும் திட்டங்களையும் மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம் என்று கூறினார்.

இந்தியாவின் கடல் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் மூன்று முக்கியமான நாடுகள் அமெரிக்கா, தென் கிழக்கு ஆசியா, மற்றும் ஐரோப்பிய நாடுகளாகும். மேலும் ஜப்பானிலிருந்து உருவான தேவை என்பதும் நமது ஏற்றுமதி வளர்ச்சிக்கு உதவியாக இருந்தது.

உறைநிலை இறால் என்பது தொடர்ந்து கடல் உணவுப் பொருட்களுள் ஏற்றுமதியில் முன்னணி வகிக்கும் ஒன்றாக இருந்தது. இதன் பங்களிப்பு அளவில் 42.05 சதவீதமாகவும், மதிப்பில் 69.95 சதவீதமாகவும் இருந்தது.

அமெரிக்கா 2,03,837 டன் மதிப்பில் 1,917 பில்லியன் டாலர் மதிப்புள்ள கடல் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்திருந்தது. டாலர் மதிப்பில் 33.99 சத்த்துடன் கூடிய முக்கியமான இறக்குமதியாளராக விளங்கியது. ஐரோப்பிய யூனியனுக்கான உறைநிலை இறால் ஏற்றுமதியில் 6.98 சதவீதம் குறைவு ஏற்பட்டது. மதிப்பில் இது 3.26 சதவீதமாகும்.

ஜப்பான் பிளாக் டைகர் இறாலிற்கு புதிய சந்தையாகத் தோன்றியது. இதன் பங்களிப்பு டாலர் மதிப்பில் 49.38 சதவீதமாகும். அமெரிக்கா 18.09 சதவீதம், ஐரோப்பிய யூனியன் 15.06 சதவீதமாகும். ஜப்பான் இந்திய கடல் உணவுப் பொருட்களுக்கான நான்காவது பெரிய இறக்குமதி நாடாகும். அலவில் 17.51 சதவீதமும் மதிப்பில் 6.7 சதவீதமும் உயர்வு ஏற்பட்டுள்ளது.

# கடல் உணவு ஏற்றுமதி: இந்தியாவின் கடுமையான தரப்பரிசோதனை

ஐரோப்பிய யூனியனிலிருந்து தொடர்ந்து இந்திய கடல் உணவுப் பொருட்களுக்கான தேவை அதிகரித்து வரும் நிலையில் இந்தியா கடல் உணவுப் பொருட்களின் உற்பத்தியில் தரப்பரிசோதனை முறைகளைத் தீவிரப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. தேவையான தர நிர்ணயங்களுக்கு உட்படாத பொருட்கள் உடனே தடைசெய்யப்படும். ஐரோப்பிய யூனியன் இந்தியாவிடமிருந்து இறால் இறக்குமதி செய்யும் நாடுகளுள் முக்கியமான நாடாகும்.

ஐரோப்பிய யூனியன் எடுத்த முடிவின்படி தரச்சோதனைக்காக எடுக்கும் சாம்பிள்களின் அளவை 10 சதத்திலிருந்து 50 சதமாக உயர்த்தியும், தரப்பரிசோதனையில் தேராத சரக்குகளை அனுப்பிய ஏற்றுமதியாளர்களை அகற்றிவிடவும் வாய்ப்புண்டு. எனவே உற்பத்தியான பொருட்களின்மீது கடுமையான தரப்பரிசோதனைகளை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு தரமற்ற பொருட்களை இந்தியாவிலேயே தடை செய்து விடுவது போன்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். மேலும் இந்தியா மேற்கொண்டுள்ள தரச் சோதனை நடவடிக்கைகள் குறித்த செய்திகளை ஐரோப்பிய யூனியன் அறிந்து கொள்ளும் விதத்தில் அதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகிறது என்று அரசு அதிகாரி ஒருவர் பிசினஸ் லைனிடம் கூறியுள்ளார்.

கடல் உணவுப் பொருட்களில் மாசுகளின் அம்சங்களைக் கண்டறியும் விதத்திலான சாஃப்ட்வேர்களை நாட்டில் நிர்மானித்தும், தரச் சோதனைகளில் புதிய முறைகளை ஏற்படுத்தி

உள்ளதையும் Directorate General for Health and Food Safety அதிகாரிகளுடன் பகிர்ந்து கொள்ளப்படும். ஏனென்றால் இந்த நிறுவனம் ஐரோப்பிய யூனியனின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பான உணவு போன்றவற்றிற்கு பொறுப்பேற்றுள்ள அமைப்பாகும்.

இந்தமாதம் புரூசெல்ஸ்சில் நடைபெறவிருக்கும் குளோபல் சீஃபுட் கண்காட்சியின் போது இதற்கான சந்திப்பு நடைபெறும். இது வழக்கமாக இருதரப்பிலும் கருத்துக்களைப் பறிமாறிக் கொள்ளும் வழக்கத்தின் ஒரு பாகமே ஆகும். ஆனால் இந்த வருடம் ஐரோப்பிய யூனியன் இந்திய கடல் உணவுப் பொருட்களின்மீது கொண்டிருந்த அதிருப்தியை மாற்றி அமைத்து இந்திய பொருட்கள் தரமானவை, நம்பகமானவை என்ற எண்ணம் அவர்களுக்கு நிச்சயம் உருவாகும் என்று அதிகாரி ஒருவர் கூறினார்.


ஐரோபிய யூனியன் தரச் சோதனைகான சாம்பிள்களை 10 சதவீத்த்திலிருந்து 50 சதமாக உயர்த்தியிருப்பது தொடர்பாக இந்தியா தொடர்ந்து வாதம் செய்தபடி உள்ளது. வியட்நாம் மற்றும் பங்களாதேசம் ஆகிய நாடுகளுக்கு 10 சதவீதம் என்ற நிலை தொடரும் போது இந்தியா இதனை மோசமான நடவடிக்கையாகவே கருதுகிறது. மேலும் குறைகள் தென்படும் சரக்குகளை அனுப்பிய ஏற்றுமதியாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கலாம், ஆனால் ஒட்டு மொத்தமாக ஒதுக்கி வைப்பது சரியான முறையல்ல என்ற கருத்தையும் இந்தியா பதிவு செய்துள்ளது. இது குறித்து சாதகமான முடிவுகளை ஐரோப்பிய யூனியன் எடுக்கும் என்று நம்புவதாகவும் அதிகாரி கூறினர்.

இந்திய கடல் பொருள் ஏற்றுமதி 2016-17ல் 6.12 பில்லியன் டாலருக்கு அதிகரித்துள்ளது. இது அதற்கு முந்திய ஆண்டில் 5.57 பில்லியன் டாலராக இருந்த்து. இதன் வளர்ச்சி 9.83 சதவீதமாகும்.

# Price List of MPEDA Publications/Periodicals

| Sl. No. | Particulars | Amount (Rs.) |
|---|---|---|
| | **Periodicals** | |
| 1 | MPEDA Newsletter – Annual Subscription Charge | 1000.00 |
| General - Publications | | |
| 2 | Exporters Directory- Digital CD | 50.00 |
| 3 | Indian Seafood - Product Catalogue | 150.00 |
| 4 | Coffee Table Book | 900.00 |
| Ornamental Fish - Publications | | |
| 5 | Ornamental Fish Breeders/Traders Directory | 25.00 |
| 6 | Water Quality in the Ornamental Aquatic Industry | 125.00 |
| 7 | International Transport of Live Fish in the Ornamental Aquatic Industry | 125.00 |
| 8 | Live Food Cultures for the Ornamental Aquatic Industry | 125.00 |
| 9 | Bio-Security in the Ornamental Aquatic Industry | 125.00 |
| 10 | Living Jewels - A Handbook on Freshwater Ornamental Fish | 150.00 |
| Aquaculture - Publications | | |
| 11 | Diseases in Brackishwater Aquaculture | 100.00 |
| 12 | Diseases of Cultured Shrimp and Prawn in India | 100.00 |
| 13 | Breeding, Seed Production & Farming of Mud Crab | 50.00 |
| 14 | Hatchery Seed Production & Farming of Cobia - Initiatives | 50.00 |

# இந்தியாவின் தெலிங்கானா 2018-19ல் ஒரு பில்லியன் மீன் குஞ்சுகளை வெளியிடவுள்ளது



இந்தியாவில் புதிதாக உதயமாயுள்ள மாநிலமான தெலிங்கானா 2018-19 நிதியாண்டு காலத்தில் இந்த மாநிலத்தின் மீன் உற்பத் தியை அதிகரிக்கும் முயற்சியில் சுமார் 820 மில்லியன் குஞ்சுகளை உற்பத்தி செய்ய தீர்மானித்துள்ளது.

இந்த மாநிலத்தின் மீன்வளத்துறை அமைச்சர் தலசானி ஸ்ரீனிவாச யாதவ் கூறும் போது இந்த முயற்சியால் இந்த மாநிலத் தின் மீன் உற்பத்தி 30 சதவீதம் அதிகமாகி சுமார் 3,50,000 மெ ட்ரிக் டன் உற்பத்தியாகும் எனக் கூறப்படுகிறது.

மேலும் அமைச்சர் தமது அறிக்கையின் போது 2017-18 காலகட்டத்தில் இந்த மாநிலத்தில் 2,71,000 மெட்ரிக்டன் மீனும், 510 மில்லியன் குஞ்சுகளும் உற்பத்தி செய்யப்பட்டது என்று கூறினார்.

சமீபத்திய மதிப்பீட்டின்படி தெலிங்கானா இந்தியாவின் நீர்வளமிக்க மூன்றாவது மாநிலமாகத் திகழ்கிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் இங்கு, கோதாவரி, கிருஷ்ணா எனும் மிகப் பெரிய நதிகள் உள்ளன. இந்த நதிகள் கடந்து செல்லும் பாதையில் 77 பெரிதும், நடுத்தரமானதும், சிறியதுமான தடுப்பணைகள் உள்ளன. மேலும் இந்த மாநிலத்தில் மீன் உற்பத்தியாகும் 24,100 குளங்கள் இருப்பதாகவும் கூறினார். வரும் ஆண்டுகளில் பல நீர்ப்பாசனத் திட்டங்கள் உருவாக்கப்படவுள்ளதாகவும் இதனால் மீன் உற்பத்தியும் அதிக மாகும் என்றும் கூறினார்.

மீன் வளம் மற்றும் கால்நடைத்துறையின் செயலாளர் சந்தீப்குமார் சுல்தானியா கூறும்போது இந்த மாநிலத்தின் மீன் உட்கொள்ளும் அளவு வெறும் ஏழு கிலோ மட்டுமே என்றும், இதன் தேசிய சராசரி அளவு 11 கிலோவாகும் என்றும் கூறினார். மீன் குஞ்சுகளின் உற்பத்தி அதிகமாகும்போது இந்த இடைவெளியும் பூர்த்தியாகும் என்றும், இந்த மாநிலத்திலிருந்து இதர மாநிலங்களுக்கு மீன்களை அனுப்பிவைக்க முடியும் என்றும் கூறினார். ஆனால் தற்சமயம் உள்நாட்டுத் தேவையைச் சமாளிக்க அடுத்துள்ள மாநிலங்களிலிருந்து மீனை இறக்குமதி செய்து வருகிறது என்றும் கூறினார்.

உள்நாட்டுத் தேவை போக எஞ்சி இருக்கும் மீனை தெலிங்கானா மற்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் நிலை உருவாகும் என்றும் சுல்தானியா கூறினார்.

இந்த மாநிலத்தில் வரும் பட்ஜெட்டில் ஒருங்கிணைந்த மீன்வள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்திய பணமதிப்பில் 10 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் மீன் குஞ்சுகள் உற்பத்தி , அறுவடை மற்றும் விற்பனை ஆதரவு, மற்றுமுள்ள கட்டுமானத் திட்டங்களின் வளர்ச்சி போன்றவை கருத்தில் கொள்ளப்படும்.

தெலிங்கானா இப்போது புதிய மீன் மார்க்கெட்களை உருவாக்கியுள்ளது. இங்கு மிகவும் சுகாதார முறையிலான மீன்கள் விற்பனை செய்யப்படுகிறது. இந்த மாநிலம் மீன் அபிவிருத்தி தொடர்பான கண்காட்சிகளை ஏற்பாடு செய்து வருகிறது.

# மீன்பிடிப் படகுகளில் மீன்பிடித்தல் நிர்வாகப் பயிற்சி

மீன்பிடிப்படகுகளில் மீன்பிடிக்கும் அளவு நிர்வாகம் குறித்த விழிப்புணர்வு பயிற்சி மார்ச்,28,2018ல் தோப்பம்பாடியிலுள்ள கொச்சி மீன்பிடித் துறைமுகத்தில் நடைபெற்றது. முனைவர் வி.கே.சாஜேஷ், விஞ்ஞானி, கூட்டத்தினரை வரவேற்றார். திருமதி.பி.ஜெயந்தி, விஞ்ஞானி இந்த திட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறினார். முனைவர்.எம்.பி.ரெமேசன், முதன்மை விஞ்ஞானி கடல் பகுதியைப் பாழ்படுத்தும் பிளாஸ்டிக் கழிவுகளின் தீமை பற்றியும் அவற்றைத் தவிர்ப்பதற்கான தொழில்நுட்ப முறைகள் பற்றியும் பேசினார். சமீபகாலங்களில் அதிகமான அளவில் மீன்பிடித்தல் மற்றும் தகாத முறைகளிலான மீன் பிடித்தலும் நடைபெற்று வருவதால் ஒருவிதமான காலநிலை மாற்றத்துடன் கூடிய விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படுகின்றன. கடலின் மீன்வளம் நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருவதும், பிளாஸ்டிக் கழிவுகள் கடலில் சேர்வதால் கடலின் அடிப்பாகத்தி லுள்ள இயல்புத்தன்மை அழிந்து போவதால் மீன்கள் உற்பத்தி யாவதற்கான சூழல் இல்லாமல் போகும் நிலைமை உருவாகியுள்ளது என்றும் கூறினார். மீன்பிடிப்படகுகளை இயக்குபவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் வலைப் பைகளைப் பயன்படுத்தி கடலிலுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை அப்புறப்படுத்தும் முறை செயல்முறைவிளக்கத்துடன் விளக்கப்பட்டது. இந்த பயிற்சி மீனவர்களிடையே முறையான மீன்பிடி நிர்வாகம் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என்று கூறலாம்.

# சூரிய வெப்பத்தில் மீன் உலர்த்தும் முறைக்கான மாதிரி அமைப்பு






சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி மீன்களை உலர்த்தும் முறையில் நவீனமான முறையைப் பின்பற்றுவதில் ஆபா ஃபிஷ் புராடக்ட்ஸ் என்ற நிறுவனம் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஐ.சி.எ.ஆர். – சி.ஐ.எஃப்.டியின் ஆதரவுடன் சம்பக்கரையிலுள்ள செயின்ட்.ஜேம்ஸ் சர்ச்சிலுள்ள வளாகத்தில் ஏப்ரல் 10,2018ல் உலர்ந்த மீன் விற்பனை நிலையம் துவங்கப்பட்டுள்ளது. கேரளத்தில் முதன்முறையாக அமைக்கப்பட்டுள்ள இந்தக் கடை நவீனமான முறையில் புதிய தலைமுறை விற்பனையாளர்களைக் கவரும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு விற்பனைக்கு வைகப்பட்டுள்ள உலர்வடிவ மீன்கள் அனைத்தும் சுகாதாரமான முறையில் ஐ.சி.ஏ.ஆர் – சி.ஐ.எஃப்.டியால வடிவமைக்கப்பட்ட சூரிய உலர்த்திகள் மூலமாக உலர்த்தப்பட்டவையாகும். அறிவியல் முறைப்படி உலர்த்தப்படும் இந்த முறையில் தூசியற்ற சுத்தமான, இயல்பான மணத்துடன் கூடிய உலர்ந்த மீன் வகைகள் இங்கு கிடைக்கும். பாரம்பரிய முறைப்படி உலர்த்தப்பட்ட மீன்களை விட மிகக் குறைவான ஈரப்பதத்துடன் பலரும் விரும்பத்தக்க விதத்தில் இருக்கும்.

இந்த நவீனமான உலந்த மீன் விற்பனை நிலையத்தை திரு.பி.டி.தாமஸ், எம்.எல்.ஏ. திரு. வி.பி.சந்திரன், கார்ப்பரேசன் கவுன்சிலர், முனைவர்.எ.என்.ரவிசங்கர், இயக்குநர், ஐ.சி.ஏ.ஆர். – சி.ஐ.எஃப்.டி. முனைவர்.மனோஜ் பி.சாமுவேல், தலைமை, பொறியியல் பிரிவு, சி.ஐ.எஃப்.டி. மற்றும் முனைவர்.ஜார்ஜ் நைனான் பிரின்சிபல் இன்வெஸ்டிகேடர், ஏ.பி.ஐ. சென்டர் ஆகியோரின் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

# ஹில்சா மீனின் ஊட்டச் சத்துச் சோதனை



இந்தியாவில் முதல்முறையாக உணவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட 100 மீன்களின் ஊட்டச்சத்துக்கள் தொடர்பான தகவல்களை வகைப்படுத்தியுள்ளனர். சுமார் பத்து ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் ஹில்சா வகை மீனில் அதிகமான சத்துக்கள் உள்ளதாக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வை பராக்பூரிலுள்ள ஐ.சி.ஏ.ஆர். - இந்தி யன் கவுன்சில் ஆஃப் அக்ரிகல்சுரல் சயின்சை சேர்ந்த விஞ்ஞானிகள்மேற்கொண்டனர். இதில்பிம்தால், புவனேஷ்வர், கொச்சி மற்றும் கொட்டியிலுள்ள நிறுவனங்களும் பங்கேற்றன.

நியுட்ரிஃபிஷ்இன் எனும் இந்த டேட்டாபேசில் சுத்தநீர், குளிர்நீர், உப்புநீர் போன்ற பலவேறு நிலைகளில் வளரும் மீன்களிலுள்ள ஊட்டச் சத்து குறித்த விவரங்கள் அடங்கியிருக்கும். இதில் சாதம் மற்றும் மீன் உணவுடன் சேர்ந்த உணவு மிகச் சிறப்பானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த குறிப்புகளில் மீன் வகைகளில் இருக்கும் புரோட்டின், ஒமேகா 3 ஃபேட்டி ஆசிட்கள், மற்றும் மைக்ரோ ஊட்டங்களான வைட்டமின்கள், தாதுப் பொருட்கள் ஆகியவை அடங்கும்.

இதில் ஹில்சா மீனில் ஒமேகா 3 ஃபேட்டி ஆசிட்கள் அதிகம் இருப்பதாகவும் இதனைத் தொடர்ந்து மத்தி மற்றும் கோய் மீனில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இதனை இந்தத் திட்டத்தின் தேசிய ஒருங்கமைப்பாளரான முதன்மை விஞ்ஞானி பிரசன்னா மொகந்தி கூறினார்.

கொழுப்புச் சத்துள்ள மீன்களை வாரம் இருமுறை உட்கொள்வதால் இதய நோய்கள் வராமல் தடுக்கலாம் என்று பல ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. மேலும் இந்த டேட்டா பேசில் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்ற கொழுப்பு வகைகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

ஹில்சா மீனில் தேவையற்ற கொழுப்பு அம்சம் 57 சதவீதம் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே இந்த மீனில் மனிதர்களுக்குத் தேவையான கொழுப்பு மற்றும் ஊட்டச் சத்துக்களைக் கொடுக்கும் தன்மை இருப்பதாக விஞ்ஞானிகள் ஃபுட் கெமிஸ்ட்ரி இதழில் குறிப்பிட்டுள்ளனர்.

ஆய்வுகளின் போது மஞ்சள் சூறை மீனில் புரோட்டினின் அளவு 100 கிராமில் 23.9 கிராம் இருந்ததாகக் கூறப்படுகிறது. அதே சமயம் பாம்பே டக்கில் புரோட்டின் 100 கிராமில் 8.2 கிராம் மட்டுமே இருந்தது.

சாதரணமாக உட்கொள்ளும் கறிமீன் மற்றும் ஹில் சாவில் புரோட்டின் 20 சதவீதம் உள்ளது.

மொகந்தி மேலும் சுத்த நீர் நிலைகளில் நம்நாட்டில் பரவலாகக் காணப்படும் சிறு மீன் வகைகளில் உடம்பிற்குத் தேவையான தாதுப் பொருட்களும் வைட்டமின்களும் அதிகம் இருப்பதாகக் கூறினார்.

பராக்பூர் ஆராய்ச்சி நிலையம் தாதுப் பொருட்களும், வைட்டமின்களும் நிறைந்துள்ள சிறிய நாட்டுரக மீன்களை அதிக அளவில் பெருக் கம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று கூறினார். இந்த மீன்களை அவற்றின் எலும்பு மற்றும் தலைப்பகுதியுடன் உட்கொள்ளும்போது பெரிய வகை மீன்களில் கிடைக்காத சத்துக்கள் இவற்றில் கிடைக்கின்றன என்று கூறினார்.

இந்த டேட்டா பேசை பயன்பாட்டாளர்கள், மருத்துவர்கள், ஊட்டச்சத்து நிபுணர்கள், மற்றும் உணவுக் கொள்கைகளைத் திட்டமிடுபவர்களும் பயன்படுத்தும் வகையில் அமைந் துள்ளது. மேலும் இதனை உலக வங்கியின் கவனத்தைக் கவர்ந்துள்ளது.

# உலக உணவுப் பாதுகாப்பு மற்றும் பூமியை மேம்படுத்தும் மீன்வளர்ப்பு

உலக மக்கள் தொகை அதிகரிப்பின்படி 2050 காலகட்டத்தில் உணவுத் தேவைக்காக மட்டும் 52 சதவீதம் கூடுதலான கால் நடைகள் தேவைப்படும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

இதற்கான எளிதான வழிமுறையாக கலிபோர்னிய சாந்த



பார்பரா பல்கலைக்கழகம் மீன் வளப்பதால் புரோட்டின் நிறைந்த சத்துள்ள உணவை மட்டுமல்ல சுற்றுச் சூழலையும் பாதுகாக்க இயலும் என்று கருதுகின்றது.

கால்நடைகளை வளர்ப்பதற்கு அதிக அளவிலான நிலப்பரப்பு, அதிகப்படியான உழைப்பு, போன்றவை தேவைப்பட்டாலும், அதனால் சுற்றுச் சூழலைப் பாதிக்கும் விதத்திலான விளைவுகளே ஏற்படும். இந்த கால்நடைகளின் தீவனத்திற்காக விளைநிலங்களைப் பயன்படுத்த வேண்டிய சூழல் உருவாகும். ஆனால் நீரின உயிர்களை வளர்க்கும் பட்சத்தில் இது போன்ற பிரச்சனைகள் ஏற்படுவதில்லை.

இந்த பல்கலைக் கழகம் மேற்கொண்ட ஆய்வில்தான் முதன்முறையாக மீன் வளர்ப்பிற்கு சிக்கனமான நிலப்பரப்பு போதும் என்ற கருத்து வெளிப்பட்டது. மேலும் இந்த ஆய்வுக் குறிப்புகள் மீன் வளர்ப்பின் மூலமாக உலக அளவில் உணவுப் பாதுகாப்பு நிலப்பரப்பு சிக்கனம் ஆகியவை வெளிப்பட்டது.

இதில் ஈடுபட்ட ஆராய்ச்சியாளர்கள் கால் நடைகளை வளர்ப்பதற்கும், மீன் வளர்ப்பதற்கும் தேவைப்படும் 2050 வரையிலான நிலப்பரப்பின் பயன்பாட்டை ஒப்பிட்டுள்ளனர்.

மேலும் 2050ல் நீர் உயிரின வளர்ப்பின் மூலமாக அதிகரித்து வரும் உலகத் தேவையை ஈடுகட்டி கால் நடைகளின் உணவிற்கான தேவையை அகற்றிவிட முடியும் என்று கூறுகின்றனர்.

கால்நடை வளர்ப்பைத் தவிர்த்து மீன் வளர்ப்பை பெருக்குவதன் மூலமாக சுமார் 729 முதல் 747 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பை குறைக்க முடியும் என்பதாகும். இந்த நிலப்பரப்பின் அளவு என்பது உலகின் ஏழாவது பெரிய நாடு என்று கருதப்படும் இந்தியாவின் நிலப்பரப்பை விட இரண்டு மடங்கு அதிகமானதாகும்.

உணவுத் தேவை மற்றும் விருப்பம் என்பது எதிர்கால சுற்றுச் சூழலையும் சார்ந்த ஒன்றாகும். எனவே நீர் உயிரின வளர்ப்பின் மூலமாக எதிர்காலத்தில் உலக அளவிலான பாதுகாப்பான உணவு மற்றும் நிலப்பரப்பின் பாதுகாப்பிற்கும் ஏற்றதாக அமையும்.

# அப்ஃபிஷ்டெக் 2018

ஐ.சி.ஏ.ஆர் – சி.ஐ.எஃப்.டி கொச்சி மற்றும் சொசைட்டி ஆஃப் ஃபிஷ்ரிஸ் டெக்னாலஜிஸ்ட் (இந்தியா) ஆகிய நிறுவனங்கள் இணைந்து அப்ஃபிஷ்டெக் 2018 எனும் கருத்தரங்கை மார்ச் 23-24, 2018 தேதிகளில் விசாகபட்டினத்தில் நடத்தினர். இதில் ஆந்திரப் பிரதேசத்தில் மீன்வளத்திற்கான வாய்ப்புகள் மற்றும் சவால்களை சமாளிக்கும் விதத்திலான கருத்துக்கள் இங்கு விவாதிக்கப்பட்டன.

திரு.வி.பத்மநாபன், தலைவர், சீஃபுட் எக்ஸ்போர்ட்டர்ஸ் அசோசியேசன் ஆஃப் இந்தியா, இந்த நிகழ்ச்சியைத் துவக்கி வைத்து புக் ஆஃப் அப்ஸ்டிராக்ட்ஸ் எனும் புத்தகத்தையும் வெளியிட்டார். அவர் உரையாற்றும் போது மீன் வளத்துறைக்கு வேளாண்மைக்குள்ள அந்தஸ்தைக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். ஏற்றுமதியாகும் பொருட்களில் தடைசெய்யப்பட்ட ஆன்டிபயாடிக்ஸ் இருப்பது என்பது சுமார்,40,000 கோடி மதிப்புள்ள வர்த்தகத்தை மொத்தமாக அழித்துவிடும் என்பதால் தரமான மற்றும் பாதுகாப்பான மீன் வகைகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும் இந்த துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரும் இந்த தொழிலின் நிலையான வளர்ச்சியை மனதில் கொண்டு பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். முனைவர். ஜே.கே.சுந்தராய், இயக்குநர், ஐ.சி.ஏ.ஆர் – சி.ஐ.எஃப்.எ. புவனேஷ்வர், சிறப்பு விருந்தினராக இருந்தார். அவர் பேசும் போது மீன் வளர்ப்பின் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது அவசியம் என்றும் நமது பாரம்பரியமான உள்நாட்டு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி லாபகரமானதும் தரமானதுமான மீன் உற்பத்தியில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

www.mpeda.gov.in



# There's no seafood as Irresistible as Indian Seafood

From the sparkling Indian seas comes the finest seafood in the world. Enjoy it in abundance throughout the year.

*You haven't tasted the best seafood, if you haven't tasted Indian seafood.*



The Marine Products Export Development Authority
(Ministry of Commerce & Industry, Government of India)
MPEDA House, Panampilly Avenue, Kochi - 682 036, Kerala, India
Phone: +91 484 2311979 Fax: +91 484 2313361 E-mail: ho@mpeda.gov.in